உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41] துந்துபி ஆண்டு புரட்டாசித்திங்கள் 10-10-82 [இதழ் 11

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்



ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[☆]—

சொக்கநா தாஉனையே
சொல்லுமடி யேனுடைய
பக்கமாய் நின்றுவினை
பாற்றியே — எக்காலும்
மீண்டுவா ராதகதி
மேவுவிப்பாய் தென்மதுரைத்
தாண்டவனே சொக்கநாதா.

—சொக்கநாத வெண்பா. 93.

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41 ‖ 10–10–82 ‖ இதழ் 11

உட்பொருள்

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 23
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 25
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 250

உ

குருபாதம்

தருமையாதீனம்

"ஞானசம்பந்தம்" திங்கள் இதழ்

சந்தாதாரர்களுக்கு

ஓர் அறிவிப்பு

தருமையாதீனத்திலிருந்து திங்கள் தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமண மும் பரப்பி, சிவஞானத்தேன் நிறைத்து, கற்போர் கருத்தைக் கவர்ந்துவரும் "**ஞான சம்பந்தம்**" நாற்பத்தொருஆண்டுகள் நிறைவு பெறுகிறது.

சந்தாதாரர்கள் தொடர்ந்து ஆண்டுக் கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர்களாகச் சேரவிரும்புவோர் கிழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக்கட்டணம் அனுப்பியும், "**ஞானசம்பந்தம்**" இதழைப் பெற்றுக் கற்றுப் பயனுறு வார்களாக.

வேலை மிகுதியினலோ அல்லது மறதியினலோ ஆண்டுச் சந்தா செலுத்துவதில் தடை ஏற்படலாம். தடை யில்லாமல் "**ஞானசம்பந்தம்**" பெறவாய்ப்பு அளிக்கும் முறையில் ஆயுள் சந்தா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. **ஆயுள் சந்தா** அறிவிப்புச்செய்த 19—2—72 முதல் இன்று வரையில் 925 அன்பர்களுக்கு மேலாக ஆயுள் சந்தா செலுத்தி ஆயுள் உறுப்பினராகி உள்ளனர்.

ஆயுள் சந்தா செலுத்தினல் அவர்களது வாரிசுகளும் "**ஞானசம்பந்தம்**' பெற வசதிசெய்துதரப்படும். மேலும் தமது ஆயுள் சந்தாவை மற்றவர்களுக்கோ கல்வி அற நிறுவனங்களுக்கோ மாற்றிக் கொடுக்க விரும்பினல் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்துதரப்படும்.

இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்தி ஆயுள் சந்தா தாரர்களாகச்சேர்ந்து "**ஞானசம்பந்தம்**" பெற்றுப்பயன டையுமாறு கேட்டுக்கொள்கின்ருேம். இன்றே உங்களை ஆயுள் உறுப்பினராக்கிக் கொள்ளுங்கள்.

" ஞானசம்பந்தம் " மாத இதழ் அஞ்சல் கட்டணம் பேப்பர், பிரிண்ட் இங்க் விலை ஏற்றத்தாலும் அரசாங்க ஆணைப்படி, இப்போது "ஞானசம்பந்தம்" திங்களிதழ் அனுப்ப, உள்நாட்டிற்கு 0—05 காசும், சிலோனுக்கு 0—90 காசுகளும் மலேசியா முதலிய நாடுகளுக்கு ரூ. 1—15ம் அஞ்சல்தலை ஒட்டவேண்டியுள்ளது. ஆகவே "ஞான சம்பந்தம்" இதழ் ஆண்டுக்கட்டணத்தில் மாறுதல் செய்யப்பட்டுளது.

1983 ஜனவரி 31 தேதிக்குள், மேற்குறிப்பிட்டுள்ளபடி சந்தாத் தொகை கிடைக்கப் பெறுவிட்டால் "ஞான சம்பந்தம்" இதழ் அனுப்பப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா (உள்நாடு)	... ரூ.	12—00
ஆண்டுச் சந்தா (சிலோன்)	... ரூ.	23—00
ஆண்டுச் சந்தா (வெளிநாடு)	... ரூ.	25—00
ஆயுள் சந்தா (உள்நாடு)	... ரூ.	125—00
ஆயுள் சந்தா (வெளிநாடு)	... ரூ.	250—00

விளம்பரம்

பின் அட்டை வெளிப்பக்கம்	**2 – கலர்**	**ரூ.**	**300—00**
பின் அட்டை உட்பக்கம்	**1 – கலர்**	**ரூ.**	**200—00**
இதழின் உட்பக்கம்	**,,**	**ரூ.**	**100—00**

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :

செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மயிலாடுதுறை – 609 001
தஞ்சை மாவட்டம்.

குறிப்பு :— ஆயுள்சந்தா தொகைஅனுப்புவோர் "ஞானசம்பந்தம் திங்கள் இதழ்" என்கிறபெயருக்கு டிராப்ட் எடுத்து அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 41 || துந்துபி – புரட்டாசி – 10—10—82 || இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— ஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

திரு. வி. க. நூற்றாண்டில் சில நினைவுகள்

சைவப்பெருநெறி:

"சைவத்தின் மேற்சமயம் வேறில்லை; அதிற்சார் சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வம் இல்லெனும் நான்மறை" என்று முன்னோர் போற்றினர். இப்பாராட்டுரை வெறும் ஆசைபற்றி எழுந்தது அன்று. உலகில்நிலவும் பலசமயங்களும் வற்புறுத்திக் கூறும் எல்லா நல்லறநெறிகளையும் தன்னகத்தே கொண்டு திகழ்வது சைவம். அவற்றில் காணப்படாத வேறு பல உயர் நெறிகளையும் எடுத்துரைப்பது; உலகியலுக்கு ஒத்தது; அறிவாராய்ச்சியால் சோதித்து நிறுவத்தக்கது; இயற்கையோடு இயைந்தது; பெண்மைக்குச் சிறப்பளித்துப் போற்றுவது; பலநூறு சான்றோர்கள் சார்ந்திருந்து உண்மை கண்டு தெளிவித்த பெருமிதமிக்கது.

தமிழ் முனிவர்:

பாரம்பரியம் மிக்க சைவக்குடும்பத்தில் பிறந்து, ஒரு முழுமையான சைவ – சமயியாகத் திகழ்ந்து தமிழக மக்கள்

நெஞ்சில் நிறைந்த பெருமைக்குரிய சான்றோர் ஒருவரை நினைவு கூர்வதில் ஞானசம்பந்தம் பெரிதும் மகிழ்கிறது. சாதுமுதலியார் என்றும், தமிழ்முனிவர் என்றும் திரு. வி. க. என்றும் மக்களால் போற்றப்பெற்ற திருவாரூர். வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு இது. 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பரடிகளின் நெறிகடவாது செந்தமிழும் – சிவநெறியும் செழிக்க அருந்தொண்டாற்றிய தீரர் திரு. வி. க. எழுபதாண்டுக்கால திரு. வி. கவின் பன்முகப் பணிகளை விரிப்பின் பெருகும்; தொகுப்பின் எஞ்சும்.

முரண்பாடற்ற பண்புகள் :

திரு. வி. க. அளவிலா இறை அன்பினர்; ஆயினும் நாத்திகர்களோடு அல்லது பிறசமயத்தாரோடு பகைமை பாராட்டாத பண்பாளர். காந்தியடிகளை அரசியல் குருவாக ஏற்றுச்சுதந்திரப் போராட்டத்தில் வெள்ளையர்களுக்கு எதிராகப் போராடியவர்; ஆயினும் வெள்ளையர்களின் உயர்பண்புகளையும் அவர்தம் மொழியையும் உளமாரப்போற்றிய உயர்நெறிகாத்தவர். தொழிலாளர் இயக்கத்தின் தூணாகநின்று அவர்கள் நலம்பேண அரும்பாடுபட்டவர்; என்றாலும் வன்முறைப்போராட்டங்களை அறவே வெறுத்து, உழைப்பினை–அதன் உயர்வினைப்புறக்கணிப்பாரைக் கண்டிக்கத் தவறாத உயர் மனம் படைத்தவர். பெண்மையின் பெருமையைச் சான்று காட்டி விளக்கிப் பெண்விடுதலைக்குப் பாரதியாருக்கும் முன்னமேயே குரல்கொடுத்தவர் ; என்றாலும் நெறிகாவாத பெண்மையைப் பேய் எனச்சாடவும் தவறாத நேர்மையாளர்.

உரைநடை அழகு :

ஒரு மனிதருக்கு இத்துணை துறைகளில் எவ்வாறு தொண்டாற்ற இயன்றது என்ற வியப்பினை அவர் வாழ்வு நமக்கு உண்டாக்குகின்றது. எளிய சொற்களால் மக்கள் விரும்பும் மெட்டுக்களிலே - பாரதி கவிதை நெறியில் பெற்ற வெற்றியை அழுத்தமான சொற்களால் – சிறு சிறு தொடர்களை அமைத்து – உணர்ச்சிவேகம் ஊட்டும் புதிய உரைநடைக்கோலங்களை உருவாக்கிப் பெற்ற அளவிலாப் பெருமை திரு. வி. க. அவர்களையே சாரும்.

> " இசை இயற்கையில் பரந்துநிற்கிறது! எல்லாம் இசைமயம் ; வண்டுகள் பல மிழற்றுகின்றன. வலம்புரிகள் சங்கீதம் முழக்குகின்றன ; பறவைகளின் பாட்

டொலியை என்னென்று பகர்வேன்! அழகிய வானம் பாடி! உன்பாட்டை என்னென்பேன்? கீதமினிய குயிலே! உன்பால் இனிமையை எவரே அமைத்தார்! குழந்தைகளின் மழலே இசைக்கு நிகருண்டோ? ஆ! ஆ! பெண் தெய்வங்களின் மொழியோ பண்மயம்! பண்மயம்! இவ்வாறு இசை இயற்கையுடன் படர்ந்து நிற்கிறது'' ...... (முருகன் அல்லது அழகு - பக். 49.)

திரு. வி. க. அவர்கள் தொடங்கிவைத்த இந்த அற்புத உரைநடையின் தாக்கத்தால் பாதிக்கப்படாத உரைநடைகளே இன்று இல்லே. இவர் நெறிநின்று பெருவெற்றிகண்டவர்கள் டாக்டர். திரு. மு. வ அவர்களும், திரு. ரா. பி. சேதுப்பிள்ளே அவர்களும் ஆவர்.

முழுமை வாழ்வு :

தனிமனித வாழ்வில் ஒழுக்கநெறி நிற்போர் மிகச்சிலர். பொதுவாழ்வில் புகழ்பெற்ருேர் பலரது தனிவாழ்வு பெருமைக் குரியதாக அமைவதில்லே. மணவாழ்வு மேற்கொண்டு - சில ஆண்டுகளில் தம் அருமைத் துணேவியாரை இழந்த திரு. வி. க அவர்கள் மறுமணம் செய்துகொள்ளாது மனவடக்கத்தோடு உடலோம்பி உயர் ஒழுக்கநெறி நின்ற பண்பினர். பொது வாழ்வில் அரசியல் தலேவராக - தொழிலாளர் தலேவராக - பத்திரிகை ஆசிரியராக - சமுகசீர்திருத்தச் செம்மலாக - கலேஞ ராக - நூலாசிரியராகத் தாம் மேற்கொண்ட எல்லாத் துறை களிலும் ஒழுக்கத்தையும் உயர்நெறிகளேயும் பேணிக்காத்த திரு. வி. க அவர்களின் வாழ்வு இன்றைய சூழ்நிலேயில் மக்கள் மத்தியில் நினேவு கூரப்படவேண்டிய அவசரமும் அவசியமும் மிக்கது என்பது ஒருதலே.

படைப்புக்கள் :

திரு. வி. க. அவர்களின் நிலேத்த புகழுக்கு அவரது எழுத் துக்களே என்றும் அடித்தளமாக அமைவன. அவர் ஆசிரியப் பொறுப்பேற்று நடத்திய 'தேசபக்தன்' என்ற நாளிதழ் அவரின் அரசியல் சிந்தனேகளே ஏந்தி வந்தது. 'நவசக்தி' யாகிய வார இதழ் தமிழ் ஆய்வுகளே வெளியிட்டது. அவரது உரைநடை நூல்கள் பல. 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற தொடரின் உட்பொருளே விளக்கி, அதேதலேப்பில் அப்பரடி களின் வாழ்வை - வாக்கோடு பொருத்திக் காட்டினர். சத்திய

சோதனைக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்ட காந்திஜியைப் போற்றி 'மனித வாழ்வும் காந்தியடிகளும்' என்ற நூல் வடித்தார். சைவத்தின் உயர்நெறிகளை விளக்க அவர் எழுதிய அரிய நூல்களுள் ஒன்று 'நாயன்மார்திறம்' என்பது, தமிழர்தம் இயற்கை வழிபாட்டுக் கோட்பாட்டை அழகுதமிழில் முருகன் அல்லது அழகு எனவிளக்கினர். அவரது தலைமைப் பேருரைகளின் தொகுப்பு 'தமிழ்த் தென்றலாக' மலர்ந்தது. பல்வேறு கோட்பாடுகளை விளக்கி, தமிழ் நூல்களில் பௌத்தம், கடவுட் காட்சியும் தாயுமானரும், இராமலிங்கசுவாமிகளின் திருவுள்ளம், சைவத்திறவு, தமிழ்நாடும் நம்மாழ்வாரும், இமயமலை அல்லது தியானம், சித்தமார்க்கம், இந்தியாவும் விடுதலையும், சீர்திருத்தம் அல்லது இளமைவிருந்து, உள்ளொளி என்பனவாகப் பல நூல்கள் திரு. வி. க வால் வெளியிடப்பட்டன. பெண்மைக்குப் பெருமை தரும் அரிய படைப்பான 'பெண்ணின்பெருமை அல்லது வாழ்க்கைத் துணை நலம்' பெரும் வரவேற்பைப் பெற்றது. தம் வாழ்வு நிகழ்வுகளை 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' எனவெளியிட்டார்.

பின்பற்றத்தக்க வாழ்வு :

உரைநடையோடு அரிய கவிதை நூல்களும் திரு. வி. க. வின் முத்திரையோடு வெளிவந்தன. 'உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல், என்ற நூல் தேசிய உணர்வினைத் தட்டி எழுப்பியது. மற்றும் திருமால் அருள்வேட்டல், பொதுமைவேட்டல், கிறித்துவின் அருள்வேட்டல், புதுமைவேட்டல், சிவனருள் வேட்டல், மார்க்ஸியமும் காந்தியமும் போன்ற பல கவிதை நூல்கள் அவரது சமயப் பொதுமைக்கும், உலகளாவிய விரிந்த நோக்கிற்கும் சான்றுகூறி நிற்பன. பிறப்பால் திரு. வி. க. சிவ நெறியினர். சைவராகவே வாழ்ந்தார். தாய்ச்சமயம் என்பதால் அவர் சைவத்தைப் போற்றவில்லை. பல நெறிகளையும் அறிந்து போற்றிய அவருக்குச் சைவம் யாவற்றையும் உள்ளடக்கி நிற்கும் சால்பு நன்கு புலப்பட்டது. உண்மையான சைவப் பெரியவராக வாழ்ந்திருந்த திரு. வி. க. அவர்களின் நினைவு அனைவரும் போற்றிப் பின்பற்றத் தக்கதாகும். பின்பற்றுவோம். முழுமையான சைவராக – காழ்ப்புணர்வில்லாச் சமயநெறியாளராக – பெண்மையைப் போற்றும் பெருமிதத்தினராக – கடமை உணர்வு மிக்க காப்பாளராக – பண்பாடு மிக்க தமிழராக வளர்வோம். வாழ்வோம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

நவராத்திரி விழாவை முன்னிட்டு

ஆசியுரை

வையந் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள் அடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்யவல்ல பரம்பொருளையே சிவபெருமான் என்று சைவம் பேசுகிறது. அப்பெருமானது கருணையையே நாம் சக்தி என வழிபடுகின்றோம். மலரில் மணம்போலவும், மணியில் ஒளிபோலவும், பரம்பொருளோடு பிரிப்பின்றிநிற்கும் அச்சக்திக்குப் பராசக்தி என்று பெயர். தேவர் முதல் தாவரம் ஈறாய எல்லா உயிர்களுக்கும் நலம் செய்தற்பொருட்டு அப்பராசக்தி எளியநிலைகளில் பல்வேறு வடிவங்கொண்டருள்கின்றாள்.

சிவபிரான் எல்லாவற்றையும் கடந்தவனாய்ப் பரசிவமாய் விளங்கும்போது பராசக்தியாய் இலங்கிய அன்னை, அவன் நாதமாயபோது – அதாவது ஒலியாயபோது சக்தி விந்துவாயும், அதாவது ஒளியாயும், அவன் உருவநிலையில் சதாசிவ மூர்த்தியாகும் போது மனோன்மணியாயும் உருத்திரனாகும்போது துர்க்கை – அதாவது உமையாயும், திருமாலாகும்போது இலக்குமியாயும், பிரமனாகும்போது கலைமகளாயும் உருக்கொள்கின்றாள்.

அம்பிகை பராசக்தி நிலையினின்றும் கருணையினால் உயிர்களுக்கு உதவிசெய்வதற்காகத் துர்க்கை, இலக்குமி, சரசுவதி என்னும் வடிவங்களில் எளியளாய்வந்து அருள் புரிகின்றாள். உலக வாழ்க்கையில் நமக்கு இன்றியமையாது

வேண்டப்படும் வீரம், செல்வம், ஞானம் ஆகியவற்றைத் தருகிருள். இம்மூன்றும் உள்ள மனிதனே பூரணத்துவம் பெற்றவனுகிருன்.

அம்பிகையைச் சிறப்பாக வழிபடுதற்குரிய நாட்கள் நவராத்திரி எனப்பெறும். இது மாதந்தோறும் அமாவாசையை அடுத்துள்ள ஒன்பதுநாட்களில்வரினும், இரண்டு நவராத்திரிகளையே சிறப்பாக எடுத்துக்கூறுவர் பெரியோர், ஒன்று கோடைக்காலத்தில் பங்குனி அல்லது சித்திரை மாத அமாவாசையை அடுத்துவரும் ஒன்பது நாட்களில் கொண்டாடப்படுவது. இது வசந்தருதுவில் வருதலால் வசந்த நவராத்திரி எனப்படும். பிறிதொன்று பலராலும் சிறப்பாகப் போற்றப்படும் நவராத்திரியாகும் இது புரட்டாசி அமாவாசையை அடுத்துவருவது. இது சரத் காலத்தில் வருவதால் சாரதா நவராத்திரி எனப்படும். வசந்த ருதுவும், சரத் ருதுவும் எமனுடைய இரண்டு கோரைப்பற்களுக்குச் சமமானவை என்று கூறுவர். இவ்விரு ருதுக்களும் வெம்மைமிகுதியாலும் தண்மைமிகுதியாலும் முறையே அம்மை, காலரா முதலிய நோய்கள். பெருகி மக்களைத் துன்புறுத்தும் காலங்களாகும். இக்காலங்களில் உலகமாதாவாக விளங்கும் அம்பிகையை வழிபடுவோர் அந்நோய்களினின்றும் நீங்கி அனைத்து நலங்களையும் பெற்றுவருகின்றனர். மேலும் மக்கட்கு ஒரு ஆண்டு தேவர்கட்கு ஒருநாளாதலின் உத்தராயணத்தில் வரும் தைமாதம் முதல் ஆனிமாதம் முடிய உள்ள ஆறு மாதங்களைத் தேவர்கட்குப் பகற்பொழுதென்றும், தக்ஷிணாயனத்தில் ஆடி முதல் மார்கழி முடிய உள்ள ஆறு மாதங்களை இரவுப்பொழுதென்றும்கூறுவர். இவ்வகையில் வசந்தநவராத்திரியும், சாரதாநவராத்திரியும் அம்பிகையை நாம் பகல் இரவு ஆகிய இருபொழுதுகளிலும் வழிபடுவதாக அமைகிறது.

மனிதன் எந்தத் தெய்வத்தைத் தியானித்து உபாசனை செய்கின்ருனே அந்தத் தெய்வத்தின் அருளைப்பெறுவான். மன்னர்களும் படைவீரர்களும் போருக்குச் செல்லும் காலங்களில் கொற்றவை எனப்படும் துர்க்கையை வழிபட்டு வெற்றியைப்பெற்று மகிழ்ந்தனர். திருமகளை வழிபட்டுச் செல்வம் பெற்றுச் சிறந்தனர். கலைமகளைப் போற்றிக் கல்வியறிவு பெற்றுக்களித்தனர் என்கின்ற விபரத்தைத் தொல்காப்பியம் முதலிய நூல்கள் காட்டுகின்றன.

நம் நாட்டில் இம்மூன்று தெய்வங்களும் முக்கோண வடிவில் இருந்து அருள் புரிந்து வருவதைக்காணலாம். இந்தியாவின் வடகிழக்கு முனையில் உள்ள (காளிகட்டம்) கல்கத்தாவில் காளியைச்சிறப்பாக மக்கள் வழிபடுவதால் வீர உணர்வு அம்மக்களிடம் சிறந்திருப்பதைக் காணு கின்றோம். வடமேற்கில் உள்ள பம்பாய் மாநில மக்கள் திருமகளை வழிபடுவதால் அங்குள்ள மக்கள் செல்வச் செழிப்புடையவர்களாய் விளங்குவதைப் பார்க்கிறோம். தமிழக மக்கள் சரசுவதியை வழிபடுவதால் ஞானத்தில் மேம்பட்டவர்களாய் விளங்குகின்றனர். இவ்வாறு அம்பிகை பல்வேறு கோலங்கொண்டு உயிர்கட்கு நலம் செய்யும் நிலைகளை எண்ணும் நல்விழாவாக நவராத்திரி அமைகிறது.

நவராத்திரி ஒன்பது நாட்களும் ஒன்பது சக்திகளை முறையே நினைந்து வழிபடும் விழா. ஒன்பது சக்திகள் மாகேசுவரி, கௌமாரி, வாராகி, மகாலஷ்மி, வைஷ்ணவி. இந்திராணி, பிராமி, நரசிம்ஹி, சாமுண்டி, எனப்படுவர், இவர்களில் முதல் மூவர் துர்க்கை அம்சமாகவும், அடுத்து வரும் மூவர் இலட்சுமி அம்சமாகவும், இறுதியிலுள்ள மூவர் சரசுவதி அம்சமாகவும் விளங்குவதால் துர்க்கை இலக்குமி சரசுவதி ஆகிய முப்பெருந் தேவியர்க்குரியவழிபாடாக நவராத்திரி கொண்டாடப்படுகிறது.

நவராத்திரி நாட்களில் விரதமிருந்து திருக்கோயி லுக்குச் சென்று அம்பிகையை வழிபட்டும், வீடுகளில் அம்பிகையை எழுந்தருளச் செய்து ஆராதனை செய்தும், தேவிமகாத்மியம், அபிராமி அந்தாதி முதலிய நூல்களை ஓதியும், ஓதச்செய்து கேட்டும் வழிபடுவோர் எண்ணற்ற நலங்களை எய்துவர்.

தனம்தரும் கல்வி தரும்ஒரு நாளுந் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

உ

திருச்சிற்றம்பலம்

தசகாரியம்

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

அருளுரை

சிவாய நம

இத்திருவைந்தெழுத்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயர்ச் சொல்லாம். சி என்பது சிவத்தையும், வா என்பது திருவருளை யும், ய என்பது உயிர்களையும், ந என்பது மாயை, கன்மம், திரோதான சத்திகளையும், ம என்பது ஆணவமலத்தையும் குறிப்பன. சொல் பொருளைக் குறித்தல் வேண்டும். பொருளைக் குறியாதன சொல்லாகா. "எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதம்ஆம்". "தன்னை உணர்த்தின் எழுத்தாம் பிறபொருளைச் சுட்டுதற்கண்ணேயாம் சொல்" என்பவற்றை இங்குக் கருதுக.

சிகாரம் வகாரம் இரண்டும் பதி. நகாரம் மகாரம் இரண்டும் பாசம், யகாரம் பசு. யகாரம் பாசத்தோடு கூடிப் படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு என்னும் நான்கு தொழிற்கும் அகப் பட்டுப் பிறப்பிறப்புக்களுற்றுழலச்செய்வது சிகாரத்தின் ஊன நடனம் ஆகும், பஞ்சகிருத்தியத்துள் அநுக்கிரக தாண்டவம் எனப் போற்றப்பெறுவது அருளலாகும். அஃதாவது, யகாரம், வகார சிகாரத்திடையுற்றும் பிறப்பிறப்பற்றும் பேரின்பம் நுகர்ந் தும் அழியாப் பெருவாழ்வு எய்தச்செய்வது. இஃது அச்சிகா ரத்தின் ஞான நடனம். அருள்வு இதுவே.

"ஊனநாடகம் ஆடுவித்தவா
உருகி நானுனைப் பருகவைத்தவா
ஞானநாடகம் ஆடுவித்தவா
நையவையகத் துடையவிச்சையே"

என்னும் திருவாசகமும்,

"ஊன நடனம் ஒருபால் ஒருபாலா
ஞான நடனம் தான்நடுவே நாடு"

என்னுந்திருவருட்பயனும் உண்மைச் சைவர் அனைவர்க்கும் தெரியும்.

அருணெறி அந்நெறியில் முயலும் அருணடை; மருணெறி, இந்நெறியில் இயலும் மருணடை என்னும் நான்கும் சாத்திர சம்பிரதாய திருட்டியுள்ளார்க்குத் தெரியும். இவற்றுள் முன்னிரண்டும் ஞானக்கூத்து விளைவு. பின்னிரண்டும் ஊனக்கூத்து விளைவு "அலகிலாவுயிர்கள் மலநடைக்கு, இலையால் அருணடைக்குண்மையாய்நின்ற.............. அம்பலவாணு" என்று, உலகுடைய நாயனுர் கழிநெடில் என்றதன் தலைத்திரு விருத்தம் உணர்த்துகின்றது. இது திருவாவடுதுறையாதீனத்தில் சிவதீக்கை பெற்றுச் சிவமானவர் திருவாக்கு. ஆதியில் இவர் வைணவராயிருந்தவர் என்பது அறிதற்பாலது.

பெரும்பாலோர் மருணெறியில் மலநடையுற்று நரகிற் செல்லும் மாக்களாகவே இருத்தல் நல்லோர் திருவுள்ளத்தை அலைக்கின்றது.

"கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக"

என்றது திருவருட்பயன் முடிவு. இதற்குத் தரிசனமாவது இது,

"சித்தாந்தத்தே சிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்துச்
சென்ன மொன்றிலே சீவன் முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி
மடுத்தானந்தம் பொழிந்துவரும் பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
மொழிந்திடவும் உலக ரெல்லாம் மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர்; இதுஎன்ன பிராந்தி',

என்று அருணந்திதேவ நாயனுர், தம் கருணைவெள்ளத்தில் அலைவதைக் கள்ளத் தலைவர் எல்லோரும் கருதுவாராக.

யகரம் மகாரத்தொடு மருவியநிலை கேவலாவத்தை, அதுவே நகாரத்தொடு நண்ணியநிலை சகலாவத்தை; அது வகாரத்தொடு விரவும்நிலை சுத்தாவத்தை, வகாரம் சிவஞானம். யகாரத்திற்கு வகாரத்துச்சேர்க்கை ஞானசம்பந்தம். இதுவே திருஞானசம்பந்தர் பெற்றுப் "பெம்மான் இவன்" என்று சுட்டிக்காட்டிய பயனை விளைத்தது. அச்சுத்தாவத்தையில்,

யகாரம் மகாரத்தையும் நகாரத்தையும் முற்றும் நீங்கி வகார ரூபமாகவே இருக்கும். 'பல பிறவிப் பழக்கத்தால் (வேம்பு தின்ற புழு அவ்வேம்பைநோக்கிநிற்கும் தன்மைபோல) யகாரம் அசத்தைநோக்கும் அப்போதெல்லாம் ஞானப்பியாசம்செய்து, அந்த (மெய்ஞ்ஞான)ப் பயிற்சியால், சிகாரத்தை உற்றுச் சிவானந்தம் ஒன்றே நுகர்தல் சுத்தாவத்தை உற்ற ஆன்மாவின் கடனாகும். சுத்தாவத்தையே உயிர்க்கு வீடும் ஆகும். சிவா நந்தம் பெறுவதே பேறு. சுத்தாவத்தையெய்திய ஆன்மா பற்று முற்றும் விட்டதால் விடுற்றதாகும். வீடும் பேறும் கூடியதே பேரின்பநிலை. விடு பாசவீடு. பேறு சிவப்பேறு. சுத்தாவத்தை யெய்தாமற் பாசவீடும் சிவப்பேறும் கூடவியலாது, அப்பாச வீடும் சிவப்பேறும் கூடியதே சைவ சித்தாந்த சுத்தாத்துவைத நிலை. ய-வுக்கு ந-ம நீக்கம் பாசவீடு. வ-சி பெறல் சிவப் பேறு என்று திருவைந்தெழுத்தில் வைத்து இதனை உணர்வதே தெளிவுறுவது. சிவபுண்ணியம், அறியாது செய்வினை, அறிந்து செய்வினை என இருவகைப்படும். முன்னது அபுத்தி பூருவ புண்ணியம். பின்னது புத்தி பூருவ புண்ணியம் எனப்படும்.

அப்புண்ணியமே சிவாநுபவம் முடிவான எல்லாம் ஆக விளங்கும். சரியை, கிரியை, யோகம், ஞானம் எல்லாம் சிவ புண்ணியமே மெய்கண்டதேவர் 'போகமாய்த்தான் விளைந்த பொற்பினன்' (சிவஞானபோத வெண்பா. 11-2) என்றருளினர். (வெண்பாக்களும் மெய்கண்டதேவர் அருளின எனல் மரபு.) அச்சிவபோகமாவது உண்மை ஞானம். பத்துவகையுள் ஒன்று

அப்பத்தாவன :-

1. அபுத்திபூருவபுண்ணியம்.	6. உபாயஞானம்.
2. புத்திபூருவபுண்ணியம்.	7. உண்மைச்சரியை.
3. உபாயச்சரியை.	8. உண்மைக்கிரியை.
4. உபாயக்கிரியை.	9. உண்மையோகம்.
5. உபாயயோகம்.	10. உண்மைஞானம்.

அவ்வுண்மைஞானம் பத்து வகைப்படும்.

அவை :-

1. தத்துவரூபம்.	6. ஆன்மசுத்தி.
2. தத்துவதரிசனம்.	7. சிவரூபம்.
3. தத்துவசுத்தி.	8. சிவதரிசனம்.
4. ஆன்மரூபம்.	9. சிவயோகம்.
5. ஆன்மதரிசனம்.	10. சிவபோகம் (ஆன்மலாபம்)

என்னும் இவை தசகாரியம் ஆகும். இத்தசகாரியம் (பத்துச் செயல்) உண்மை ஞானத்தின் விளைவு ஆதலால், ஞானத்தால் ஆகிய செயல் என்பதை மறத்தலாகாது. ஞானத்தால் ஆகும் செயலுக்கு வடிவம் கருவி முதலியன வேண்டா. இப்பத்தும் உண்மை ஞானத்தின் வகையாதலால், உண்மைஞானம் ஆகிய வகாரமும் அவ்வுண்மை ஞானத்தைப்பெற்று அதுவேயாகிய யகாரமும் (ஆன்மாவும்) அன்றி, அங்கு நகாரம் இல்லை. இன்மையால் சிவஞானிகளின் அப்பியாச ஞான சாதனமே தசகாரியம் என்றுணர்தல் பக்குவஞான சீலர்க்கே இயல்வ தொன்றாகும் ஆதலின்.

1. யகாரம் வகாரமானபின் நகாரத்தை அந்த வகார அறிவால் அறிவதே தத்துவரூபம் முதலிய மூன்றுமாகும்.

2. யகாரம் நகாரத்தின் நீங்கியவாற்றை (அச்சிவஞானத்தால்) உணர்ந்து தன்னைத்தனித்துக் காண்டல் ஆன்மரூபம்.

3. யகாரம் தத்துவரூப தரிசன சுத்தியுற்றது சிவஞானத்தால் தான்; தன்னறிவால் அன்று. தன்னறிவுக்குச் சுதந்திரம் இன்று. சிவஞானம் உணர்த்த யான் உணர்ந்தேன் எனத் தன்னை உள்ளவாறுணர்தலே ஆன்மதரிசனம்.

4. வகாரம் யகாரத்திற்குத் தத்துவரூபதரிசன சுத்தியாக்கிய தொடும் அமையாமல் அவ்வழியால் தன்னைக் காட்டியதே சிவரூபம். அஃதாவது சிவனது இச்சை ஞானக்கிரியா சத்தி ரூபம.

5. யகாரத்தை வகாரமாக்குவதே ஆன்மசுத்தி. அதில் சிவ தரிசனம் சிவயோகம் இரண்டும் நிகழ்கின்றன. இவ்வுண் மையை இக்கட்டுரை முடிவிற்காண்க.

6. வகாரமாய் நின்ற யகாரம், சிகாரத்தொடு சேர்ந்து அவ்வகா ரத்தை மறந்து சிகாரமாய் நிற்பதே சிவபோகம். இதுவே ஆன்மலாபம். 'தாயைமறந்து ஏயுமதே நிட்டை' இவற்றை பின்வருமாறு உணர்தல் வேண்டும்.

1.	தத்துவரூபம்	நின்மல சாக்கியம்
2.	தத்துவதரிசனம்	
3.	தத்துவசுத்தி	
4.	ஆன்மரூபம்	

5. ஆன்மதரிசனம் + (7) சிவரூபம் – நின்மலசொப்பனம்
6. ஆன்மசுத்தி + (8) சிவதரிசனம் + (9) சிவயோகம் – (இம்மூன்றும் ஒருநிலை) நின்மலதுரியம்
7. (ஆன்மலாபம்) + (10) சிவபோகம் – நின்மல துரியாதீதம்

இப்படிப் பத்துக்காரியமும் ஏழாயடங்கும். முதல் நான்கும் அல்லாதன இணைந்துநிகழ்தல் காண்க. இத்தசகாரியத்தைத் திருவைந்தெழுத்தில் வைத்துணர்தல் நன்ருகும். யகாரம் மகாரத்தையும் நகாரத்தையும் நீங்கிற்று. வகாரத்தொடுகூடிற்று. வகரத்தின் துணையால்தான் யகாரம் அவ்விரண்டின் நீங்கிற்று. அந்நீக்கமும் வகாரத்தின் தோற்றமும் யகாரத்திற்கு ஒரே காலத்தில் உறும்நிகழ்ச்சியே. அந்நிகழ்ச்சியே மலபரிபாகமும் சத்திநிபாதமும் ஆகும். அவைவேறல்ல. தனுகரணபுவன போகங்களும் நகாரத்தன ஆதலின் நகாரம் நீங்கியபோழ்தே அவையெல்லாம் அற்றன. அப்போது யகாரம் முத்தன் ஆகிய உண்மையை உணர்க. ஊர்பேர் உருதிரு ஒன்றுமில்லாதது. அவ்யகாரம் அந்நிலையில் அது முதல் வகார சிகாரத்திடை நிற்பதே யகாரத்துநிலை. "ஆசின் நவாநாப்பண் அடையாது அருளினல் வாசியிடைநிற்கை வழக்கு:" என்னும் உண்மை இங்கு உணர்தற்பாலது, அவ்வுண்மை நிலையே அருள்நிலை. இந்நிலை அருள்நெறியில் அருள்நடையுற்று அடைந்த (யகாரத்தின்) நிலை. சிவனது அருட் (பேரானந்தக்) கூத்தும் இந்நிலையில் நிகழ்வதே. இங்கே தத்துவரூபம் முதலிய பத்தும் வகாரமாகிய ஞானத்தால் நிகழும், யகாரம், நகாரமகாரம் இரண்டும் அற்று வகாரமாகிச் சிகாரத்தை அனுபவிக்கும். உண்மை ஒன்றே அன்றி அங்குவேறு யாதும் இல்லை. உண்மைவிளக்கம் உண்மநெறி உண்மைநெறிவிளக்கம் ஞானவாய்மை "வறுந் தொழிற்குவாய்மை பயன்" 'உண்மையுணர்ந்தார் என்றுந்தீபற' என்பவற்றிலுள்ள உண்மை, வாய்மை என்றபெயரால் உணர்த்தப்பட்டது. (திருவருளே) திருவடியேயாம். தசகாரியத்துள் தத்துவரூபம். தத்துவதரிசனம் தத்துவசுத்தி ஆன்மரூபம் என்ற நான்கும் எந்நிலையின? அந்நிலையை நன்கு உணர்தல்வேண்டும் தத்துவரூபம் முதலிய மூன்றும் பாசத்தின்நிலை. ஆன்மரூபம் பசுவின்நிலை. அவற்றுள் தத்துவசுத்தி என்பது மாயாகாரியமான தத்துவங்களின் நின்றே தத்துவங்களை நீக்குதல் இயலுமோ? தத்துவங்களை ஞானத்தால் நீக்குவதே தத்துவசுத்தியாகும். ஆகவே அந்நான்கும் திருவருளால் அத்திருவருளுருவாய ஆன்மாவின் கண் நிகழ்வனவே என்பது பெறப்படும். படவே யகாரம், வகாரம் இரண்டும் (ஆன்மாவும் திருவருளும்) மட்டும் கூடிய கூட்டத்தில் அந்நான்கும் நிகழ்வன என்பது தெளிவாகும். அப்போது ஆன்மா தன்னை உணர்கின்றது. வடிவு கண்டதன் பின்னரே வடிவுடையதைக் காண்டல் வேண்டும். ஆன்மரூபம் கண்டதன்பின்னரே ஆன்மக்காட்சி கூடும். தத்துவங்களின் நீங்கிய அவ்வேளையே நீங்கும். தானும் (ய, ஆன்மா) நீக்குந்துணையாகிய திருவருளும் ஒருங்குள்ளநிலை புலப்படும்.

புலப்படுதலாற்ருன் சிவரூபத்தின் நிகழ்வது ஆன்மதரிசனம் ஆயிற்று. இஃது எட்டாவது சூத்திரப் பொருள் கொண்டு தெரிந்துகொள்ளத்தக்கது.

ஐம்புலவேடரின் வளர்ந்து அயர்ந்தேன் என்ற உணர்வு எப்போது உண்டாயிற்று? தம் முதல் குருவும் ஆகி உணர்த்திய போது உண்டாயிற்று. தம் முதல் சிவம் அம் முதலின் உருவே சிவரூபம். சிவத்தை முதல் என்றும் சிவகுருவைச் சிவரூபம் என்றும் உணர்தல் பகுத்துணர்வின் பயனுகும். ஞானகுருவை ஞானம் எனல் குற்றம் அன்று, குற்றம் அன்ருயும் விளங்குதற் பொருட்டு, சிவம் அருள், அருளுரு என மூன்றும் திருவருட் பயனில் வெவ்வேருகக்கூறப்பட்டன. அதனுல், சிவம்தம்முதல் எனவும் அருளுரு சிவரூபம் எனவும் சிவஞானபோதம் உணர்த் திற்று. அருளுருவும் அவ்வுருவின் முன்னிலையாய அருளும் ஒன்றேயாம். அருள் உயிர்க்குயிராய் நின்றளித்தது. அதனை உயிர் காணவில்லை. அவ்வுயிர் அவ்வருளைக்காண அருளே குருவாயிற்று. அறியாமை (அறியாமல்) உள்நின்று அளித்ததே (திருவருளே) காணும் (அறியும்) குறியாகிய குரு. அது நீங்காது அருள் உயிரின் நீங்காதது போல அருளுருவாகிய குருவும் நீங்காது. குருவை நாதன், கோ, மன்னன், வேந்தன், இறைவன் என்னும் பெயராலும் குறிப்பது மரபு.

'நாதன்ருள் வாழ்க' 'ஏகனும் ஆகி அநேகனும் ஆகி, நாதனு மானுன்' 'ஏகன் அநேகன் இறைவன்' 'மாயப்பிறப்பறுக்கும் மன்னன்' 'வேகங் கெடுத்தாண்ட வேந்தன்' 'குருவே உரை உணர்வற்றதோர்கோவே' என்னும் திருவாசகம், திருவுந்தியார், திருமந்திரங்களால் உணரப்படும் அது.

சிவம் குருவாய் வந்து தான் உயிர்க்குப் பிறப்பிறப்புத் தீர்த்தாட்கொள்ளும். குருவாய் வராமல் சிவம் உயிரை ஆட் கொள்ளாது.

"அன்று முதலாகவே ஆருயிர்கட் காருயிராய்
நின்றருளும் தம்பிரான் நீங்காமல் — என்றும்
கருவாய்ப் பிறப்பைக் கழற்றினரோ தாமே
குருவாய் அருளாமற் கூறு"

என்ற துகளறுபோதத் திருவெண்பாவால் அவ்வுண்மையை அறியலாம். அறிந்தால், "தோடு கூற்றுப் பித்தா மூன்றும் பீடுடைத் தேசிகன் பேரருளாகும்" என்பது நன்கு விளங்கும். இதுவரையில் சிவரூபத்தின் நிகழ்வது ஆன்மதரிசனம் என்பது

விளக்கப்பட்டது. அவ்விளக்கத்தினிடையில், சிவரூபம் குரு என்பதுதெரிவிக்கப்பட்டது "அறியாமை யுண்ணின்றளித்ததே காணுங்குறியாகி நீங்காதகோ" என்றதிருக்குறள் வெண்பாவின் பொருளும் எடுத்துக் கோளாயிற்று. சிவரூபம் கண்ட ஆன்மா விற்கு அது ஞானதரிசனம் ஆயிற்று. ரூபம் இன்றித் தரிசனம் இல்லை. பிண்டத்தில் அருளால் நிகழ்வது ஞானதரிசனம். அந் நிகழ்ச்சிக்குச் சிவரூபத் தோற்றம் இன்றியமையாதது. அண் டத்தில் வைத்துரை அருளால் நிகழ்வதுபரை தரிசனம். அப்பரை தரிசனத்தில் உடன் நிகழ்வது சிவதரிசனம். அப்பரையுருவாக ஆன்மா நின்று சருவவியாபகத்தை எய்திய அப்போதே அவ்வான்மா சிவத்தோடு கூடுகின்றது. அக்கூட்டமே யோகம். அது சிவத்தோடுகூடியதால், சிவயோகம். பிண்டத்தில் ஞான தரிசனம் எய்தி ஞானத்தோடு கூடியது. அது ஞானயோகம். அண்டத்தில் பரைதரிசனம் எய்திய ஆன்மா சிவத்தொடு கூடியது, அது சிவயோகம். இச்சிவயோகத்தினும் வேறு சிறந்த யோகம் இல்லை.

"மெய்மைச் சிவயோகமே யோகம் அல்லாத யோகம் அவ யோகமென்றேயறி" என்று திருக்களிற்றுப்படியாரில்(74)உளது. அச்சிவயோகமேயன்றி ஏனைய யோகமெல்லாம் அவயோகம் என்றற்கு ஏதுவும் அதிற்சொல்லப்பட்டது, "அம்மையிலும் இம்மையிலும் அச்சம் தவிர்த்து அடியார் எம்மையுமாய் எங்கும் இயங்குதலான்", என்ற ஏது முன்னீரடியில் இருக் கின்றது. அடியார்க்கு இம்மையும் அம்மையும் இல்லை. அவற் றின்கண் அச்சமும் இல்லை. பிறப்பிறப்பின்றி எம்மையுமாய் எங்கும் இயங்கும் முடிவாயவொரு நிலையெய்தியதே ஏதுவாகும். இதுதான் பரமமுத்திநிலை. இதைக்கொடுக்கும் அச்சிவயோகத் தினும் வேருக யோகம் ஒன்று சிறந்ததில்லை. இச்சிவதரிசனம் சிவயோகம் என்னும் இரண்டும் நிகழ்கின்ற காலத்தில்தான் ஆன்ம சுத்தியும் உண்டாகிறது. ஆகவே, அம்மூன்றும் ஒருங்கு நிகழும் காரியம் அது. தசகாரியம் முற்கூறியவாறு ஏழாக அடங்கி நிற்கும். சிவரூபமும், ஆன்மதரிசனமும் இயையும். அப்பத்துள் இம்மூன்றும் (சிவரூபம், சிவதரிசனம். சிவயோகம்) ஆன்மசுத்தியிலும் அடங்குதலால் ஏழாயின. முடிவாக நின்ற சிவயோகம் ஆன்மலாபமாகும், 'இதுவே பேரின்பநிலை. இரவு பகலில்லா இன்பவெளி. ஒளிவறநிறைந்து அசைவற நிற்கும் பரமசிவநிலை. சாயுச்சிய முத்திநிலை ஆன்மாவிற்கு இது அன்றி வேறு இல்லை, ஆன்மா எல்லாவற்றையும் மறந்து, தற்பரத்தோடு ஒரு நீர்மையாய்விடும் நிலை இதுவே.

"பொருளும் மனையும் அறமறந்து போகம் மறந்து புலன்மறந்து
கருவி கரண மவை மறந்து காலமறந்து கலைமறந்து

தருமமறந்து தவமறந்து தம்மை மறந்து தற்பரத்தோ
டுருகியுருகி யொருநீர்மையாயே விட்டார் உய்யவந்தார்''

என்ற பழம்பாடலை இங்கு எண்ணுக.

திருவாசகத்திலே,

" கயன் மாண்டகண்ணிதன் பங்கன் எனைக் கலந்தாண்டலுமே
அயன் மாண்டருவினைச் சுற்றமு மாண்டவனியின்மேல்
மயன் மாண்டு மற்றுள்ளவாசக மாண்டென்னுடைய
செயன் மாண்டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ "

" வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல் நீர் மண்கெடினும்
தான் கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட்டுயிர் கெட்டுணர்வு கெட்டென்னுள்ளமும் போய்
நான் கெட்டாவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ ''

உண்மைநெறி என்பது தசகாரியத்தை விளக்கும். ஆறு திருவிருத்தம் உள்ள உண்மைஞானசாத்திரம். அதன் முடிவில் "பெருகு சிவபோகம் எனப்பேசும் நெறி" இதுவே என்றுள்ளது. அதனை உண்மைநெறி சங்கற்பம் உற்று என்று நூற்பெயர் உணர்த்தும் வெண்பா அறிவிக்கின்றது. துகளறுபோதப் பொருளை உண்மைநெறிப் பொருளோடு இயைத்து அடக்கிக் காட்டும் உரையே உண்மைநெறி விளக்கம் எனப்படுவது. மூலத்தை நெறி என்றும் உரையை அந்நெறியின் விளக்கம் என்றும் உணர்வதேதகும்.

" எண்ணும் அருணூல் எளிதின் அறிவாருக்கு +
உண்மை நெறிவிளக்கம் ஓதினன் — வண்ணமிலாத்
தண்காழித் தத்துவனூர் தாளே புனைந்தருளும்
நண்பாய தத்துவநாதன் ''

என்னும் வெண்பாவின் உண்மைப் பொருள் இதுவே. இதைக் கொண்டு, உண்மைநெறியை அருளிய உமாபதிதேவரையும் உண்மைநெறி விளக்கம் எழுதிய தத்துவநாதரையும் உணர்தல் நன்று. விளக்கம் எழுதியவரே நெறியையும் எழுதினர் எனக் கொள்வது மகாரச் சார்பின் விளைவே.

" மாயை நட்போரையும் மாயா மலம் எனும்மாதரையும்
வீய விட்டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்று பின்தாதையைக் கூடிப் பின்தாயைமறந்
தேயுமதே நிட்டை யென்று ரெனெழிற் கச்சியே கம்பனே. ''

என்னும் திருப்பாடல்இத்தசகாரியஉண்மையைஉணர்த்துவதே.
யகாரத்திற்கு நகாரம் (நட்பு) (நண்பன்)

,, மகாரம் (மனைவி)

,, வகாரம் (தாய்) (மெய்யருள்)

,, சிகாரம் (தாதை)

வீயவிடுதல் – மும்மலத்தின் நீங்கல்

வெளியே புறப்படல் – அருள்வெளிநடைநிகழ்ச்சி

மெய்யருளாந்தாய் – வா (திருவருள்)

தாயுடன் செல்லல் – அவனருளாலே அவன்தாள் வணங்கல். ஞானியர் வழிபாடு.

தாயை மறத்தல் - மிகுபஞ்சாக்கரத்தால் இயலும் ஆடலைப் பேணுதற்கு, முற்பட்ட அவதாரம். ஞாதுரு ஞானம் ஞேயம் நழுவாதுநழுவி நின்றநிலை.

ஏயுமது – மிகுபஞ்சாக்கரமெய்ப் பொருளாய் நிட்டைக் கூடிப் பேரின்பம் துய்த்து, அத்துய்ப்பையும் கடத்தல் (ஞேயமாத்திரமாய்) நின்றநிலை.

நிட்டை – யகாரம் சிகாரமேயாய், சிகாரமானேம் என்பதையும், மறந்து சிகாரம்ஆகிய ஞேயமாத்திரமாய் உறுதியாய் நிற்கும் பரம சுகநிலை.

தசகாரியம் உண்மை ஞானத்தின் நிகழ்ச்சி, சுத்தாவத்தையில் ஞானிகள் மேற்கொள்ளும் ஞானப்பியாசம், ஞானசாரம், சிவஞானச் செயலுடையோர், சிவஞானச் செய்தியுடையோர் என்றுணர்த்தியதால் இவ்வுண்மை புலப்படும். அப்பத்துச் செயலுள் முதல் நான்கும் நின்மல சாக்கிரம், ஆன்மதரிசனமும் சிவருபமும், நின்மலசொப்பனம். இதில் ஆன்மசிவனேடு அத்துவிதமாய்க்கண்ணும் கதிரவனும் போலிருப்பது. இஃது எட்டாவது சூத்திரப் பொருளின் எய்தும்நிலை, சிவாநுபவம் என்பது சிவனுடைய இச்சாஞானக்கிரியா சொருபம்.

நின்மலச் சுழுத்தியில் ஆன்மாசிவனெடு ஒப்பமுற்றறிவும் ஐந்தொழிலும் உடையேன் என்று உணர்ந்த மயக்கம் ஒன்றே உண்டு. அதனல் நின்மல சுழுத்தியவத்தை. இதற்குச் சூத்திரம் இல்லை. தசகாரியத்துள் அடங்கு ஞானச்செய்தியும் இல்லை.

நின்மலதுரியத்தில் சிவதரிசனம் சிவயோகம் ஆன்மா சுத்தி மூன்றும் நிற்கும். இதில் ஆன்மா உடலும் சிவம் உயிரும் போலும், அவன் உயிர். அவனருள் உடல்.

நின்மலதுரியாதீதத்தில் சிவயோகம் (ஆன்மலாபம்) ஒன்றே இதில் ஆன்மாவும் ஆன்ம ஞானமும் போல இரண்டறக்கலந்து ஒன்ருய் நின்று பிராரத்துவ போகத்தைச் சிவபோகமாய் விளை வித்து நிற்பன்.

பஞ்சாக்கரப்பஃறொடை

" தத்துவயமுடன் தற்காட்சி சுத்தி உயிர்
ஒத்த உருவம் உயர் காட்சி — சுத்தி
இலாபம் இவை எழில் இயங்கும் உயிர்க்காட்சி
நிலாவு சிவரூபம் நேராம் குலாவுசுத்தி
தன்னிற் றரிசனமும் சார்யோகம் ஆம் இரண்டும்
மன்னும் இவைஏழும் வருமுறையில் — துன்னுகின்ற
சாக்கி ரத்தில் நான்கு தகுஞ் சொப்பனம் ஒன்று
நீக்குஞ் சுழுத்தி நிறை துரியத் — தாக்கியிடும்
ஒன்றும் அதீதத்தே உற்றிடும் ஒன்ருகும். "

தன்னைத் தலைவன் எனக்கருதல் தலைமை அருளே எனக்கருதல்
பின்னர்ப் புதிதாய்அருட் செயலைப்பெறவேயெண்ணிஅதுநீக்கி
மன்னித் திருவுரு வாய்ப்போதல் மகிழும் பரசிவனைச் சார்தல்
துன்னிக்கருதும் அவத்தை யெனச் சொல்லுவாரும் உளர்
[துணிந்தே!

(சுவாமி - தசகாரியம்)

திருநாவுக்கரசு நாயனர் அருளிய

திருக்குறுந்தொகை

ஞானத் தால் தொழு வார்சிவ ஞானிகள்
ஞானத் தால் தொழுவேன் உனை நான் அலேன்
ஞானத் தால் தொழுவார்கள் தொழக் கண்டு
ஞானத் தால் உனை நானும் தொழுவனே.

இத் திருப்பாடலில், 'சிவஞானிகள்' 'ஞானத்தால்' என முதலிலும் முடிவிலும் உள்ளவற்றைச் சில ஞானிகள், ஞானத் தாய் என்று அச்சிடுவித்தும் பாடியும் வருதல் பிழை. காரணம் இதில் எழுத இடமில்லை. வாக்கிய லட்சணம் தெரிந்தோர்க்கு அப்பிழை தானே விளங்கும்.

குறிப்புரை

ஞானத்தால் :- யோகத்தாலும், கிரியை, சரியையாலும் வழிபடுதலின் வேருதலே விளக்க நின்றது. உண்மை ஞானத்தால் (தச காரியத்தால்) தொழுவார். அவர் - சிவ ஞானிகள். சில ஞானிகள் எனிற் பலஞானிகள் எதனல் தொழுவார்கள்? சிவஞானிகளுள் சிலபல எனல் குற்றமேதரும். சிவஞானிகள் உன்னே ஞானத்தால் தொழுவார். நான்உன்னே ஞானத்தால் தொழுவேன் அல்லேன். உண்மை ஞானத்தால் உன்னே தொழுவார்கள் தொழக்கண்டேன். கண்டதால், ஞானம் பெருக நானும் உன்னே ஞானத்தால் தொழுவேன். ஞானபூசையைச் செய்வது ஒன்றே என்பால் உளது. அப் பூஜையும் அதற்குரிய சிவஞானமும் எனக்கில்லே என்று அது நிறையபெற்ற சொல்வேந்தர் இச்சொல்லால் தம் நிலேயைத் தாம் எண்ணுமாற்றில் வைத்து நமக்குபதேசித்தருளினர்.

ஸ்ரீ குமரகுருபரர்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் முதல்வருமான ஸ்ரீ குமரகுருபர சுவாமி களின் திருப்பெயர் கொண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சிக்கட்டுரைகளுடன் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் மாத இதழாக வெளிவருகிறது.

ஆயுட்சந்தா	(உள்நாடு)	ரூ.	100—00
,,	(வெளிநாடு)	ரூ.	125—00
ஆண்டுச்சந்தா	(உள்நாடு)	ரூ.	7—50
,,	(ஸ்ரீலங்கா)	ரூ.	10—00
,,	(வெளிநாடு)	ரூ.	12—00

நிர்வாக ஆசிரியர் :— ஸ்ரீ குமரகுருபரர்

ஸ்ரீ காசிமடம் : திருப்பனந்தாள்.

தஞ்சை மாவட்டம் 612504.

கடிதம்:

ஆட்சிச் சொற்காவலர்,
கீ. இராமலிங்கனார் எம். ஏ.,
உறுப்பினர்: தமிழகப்புலவர்குழு,
மாநிலச்சட்ட ஆட்சிமொழி ஆணையம்,
வாழ்நாள் உறுப்பினர்: ம. கா.
பல்கலைக்கழகக் கல்விமன்றம்.

"தமிழ் மணம்"
B. கிழக்குப்பூங்காச்சாலை,
செனாய்நகர்,
சென்னை 600 030.

17—9—82.

அன்புகனிந்த குருமுதல்வர் அவர்களின், அருளார்ந்த அடிமலர்களைத்தொழுது ஏத்தி எழுதிக்கொள்வது.

ஆவணி மாதத்திய 'ஞானசம்பந்தம்' இன்று கையுற்றுக் களிப்பளித்தது. என்னை மகிழ்வித்த மூன்று செய்திகளை விரும்பிப் படித்தேன்.

தலையங்கம், ஒரு புதிய ஊழி, நமது திருமடத்தில் தோற்றுவிக்கப்பெற்றிருப்பது பற்றிய செய்தியை விளம்பி, விம்மிதம் அடையச்செய்தது. தங்கள் அருளாட்சியில் இது தோன்றுவது அறிந்து, சைவ உலகம் மட்டிலா மகிழ்ச்சியில்மலரும்; தங்கள் திறத்தைப் போற்றி, அகனமர்ந்த நன்றி கூறும். அடியேன், கழிபெருங் களிப்படைகின்றேன். திருமடத்திற்கு நானும் உரியவனாதலின், நன்றி தெரிவித்துக்கொள்வது, எனக்கே நன்றி கூறிக்கொள்வதாகும் என்று எண்ணுகிறேன். என் குருபரனார் அவர்கள் காலத்தால் செய்த நன்றி இது என்பதனை உணர்ந்து, அவர்தம் அருமைச் சேவடிமலர்களை, என் சென்னியில் அகங்குளிர அணிந்து செம்மாக்கின்றேன்.

சைவசித்தாந்தப் பல்கலைக்கழகத்திற்குக் கருவினை நமது திருமடத்தில் உருவாக்கி வைத்துவிட்ட தாங்கள், வேறொரு நிறுவனமாம் ஒரு பல்கலைக்கழகம், கருவினைவுயிர்த்துக் களிதரு குழவியை ஈன்றெடுத்து, அனைத்துலகும் போற்றும் ஆளாக்க வேண்டும் என்று ஏன் எதிர்பார்க்கவேண்டும்? நமது திருமடமே, முனைந்து முயன்று, சைவ சித்தாந்தப் பல்கலைக் கழகத்தைத் தலைநின்று நிறுவி தகைசிவண நடத்திவரவேண்டும் என்பது எனது பணிவான விண்ணப்பம். நிற்க,

இவ்விதழில், குடந்தைச் சைவ வேளாளர் மாநாட்டில் தாங்கள் அருளியுள்ள ஆசியுரை பெரிதும் போற்றற்பாலதாகத் திகழ்கின்றது. தத்துவங்களைப் பேசிக்கொண்டு செல்லாமல், இன்றைக்கு நடைமுறைக்குவேண்டிய செயல்களை மிகத் தெளிவான மொழியில் எடுத்தியம்பியுள்ளீர்கள். 'சைவ வேளாளர்,

என்னும் தொகுதியில், வைணவ நெறியைப் பின்பற்றும் வேளா ளர்களும் இணைந்து செயற்படவேண்டிய கருத்தைக் காரணத் தோடு விளக்கியிருப்பதை, அந்நெறியில்ஒழுகும் வேளாளர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணுகின்றேன், வேளாளர் களுக்கு இடையே அமையும் ஒற்றுமை, திருநெறிமேம்பாட் டுக்கேயன்றி, உலகியல் நலங்களுக்கும், இக்காலத்தில், மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இது நிற்க,

திருப்பனந்தாள் காசிமடத்து முதல்வர் அவர்களுக்கு, "கவிலமாமுனிவர்" என்னும் சிறப்புத் திருப்பெயர் சூட்டி யிருப்பது கண்டு, கழிபேருவகை எய்துகிறேன்; செயற்கரிய செய்த செம்மலார்! விரிந்து மலர்ந்து வளரும் தங்கள் தெய்வத் திருப்பணிகளுக்குப் பல்லாண்டு!

தங்கள் அருளார்ந்த அரவணைப்புக்கு
என்றும் உரியவன்,

கீ. இராமலிங்கன்.

(அட்டை 3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

13—11—82 சனி, சனிமகாப்பிரதோஷம், மாதசிவராத்ரி, ஞாயிறு விடியற்காலை நரகசதுர்த்திஸ்நானம்.

14—11—82 ஞாயிறு, தீபாவளிப் பண்டிகை, ஸ்ரீ மெய்கண்டார் குருபூஜை, பெண்ணாகடத்தில் ஸ்ரீ மெய்கண்டா ருக்கு விசேஷ அபிஷேக ஆராதனை.

15—11—82 திங்கள், சர்வ அமாவாசை, சோமவார பிரதக்ஷிண அமாவாசை. மயிலாடுதுறை - வள்ளலார்கோயில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி ஸ்ரீ கங்காதேவியுடன் தீர்த்தம் கொடுத்தருளல், கேதாரகௌரி விரதம்

16—11—82 செவ்வாய், கடைமுக ஸ்நானம், மயிலாடுதுறை வள்ளலார்கோயில் முதலியதலங்களில் காவிரியில் கடைமுகதீர்த்தம், திருவையாறு தீர்த்தம், விருச்சிக ரவி 31-45, விஷ்ணுபதி புண்யகாலம், வேளூர் மயிலாடுதுறை, குமரக்கட்டளை, சீகாழி, திருச் செந்தூர், பழனி முதலியதலங்களில் கந்தசஷ்டி உற்சவாரம்பம், திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை பூசலார் நாயனார் குருபூஜை.

"அஞ்சினாற் பொலிந்த சென்னி"

'சித்தாந்தப் புலவர்மணி'

திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

"அஞ்சினால் இயற்றப் பட்ட ஆக்கைபெற்று, அதனுள் வாழும்
அஞ்சினால் அடர்க்கப் பட்டிங் குழிதரும் ஆத னேனை,
அஞ்சினால் உய்க்கும் வண்ணம் காட்டினாய்க்கு, அச்சம் [தீர்ந்தேன்
அஞ்சினாற் பொலிந்த சென்னி அதிகைவீ ரட்ட னீரே"

முன்னுரை :

இத் திருநேரிசைச் செய்யுள், திருநாவுக்கரசர் பெருமானால், திருவதிகை வீரட்டானத்திற் பாடப்பெற்று, நான்காம் திருமுறையில் அமைந்து விளங்குகின்றது. "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை" என்பன போல வரும் திருக்குறள்கள் பலவற்றிற்போல, இத் திருநேரிசைச் செய்யுளினும், சொற்பொருட் பின்வருநிலை என்னும் அணி அழகுற அமைந்திருக்கின்றது.

இஃது "அஞ்சிலே ஒன்று பெற்றான், அஞ்சிலே ஒன்றைத் தாவி, அஞ்சிலே ஒன்று ஆறாக, ஆரியற்காக ஏகி, அஞ்சிலே ஒன்றுபெற்ற அணங்கைக் கண்டு, அயலார் ஊரில் அஞ்சிலே ஒன்றை வைத்தான், அவன்எம்மை அளித்துக் காப்பான்" எனவரும் கம்பராமாயணச் செய்யுளை நினைப்பிக்கும் வகையில், அஞ்சு (ஐந்து) என்னும் எண்ணுப்பெயர், நான்கு அடிகளிலும் விரவிவர இயன்றுள்ளது.

ஐயப்பாடு :

இதன்கண், முதல் மூன்று வரிகளினும் அமைந்துள்ள 'அஞ்சு' என்னும் சொல், முறையே ஐம்பூதம் – ஐம்பொறி – ஐந்தெழுத்து என்பனவற்றைக் குறிக்கும் நிலையிற் பெரிதும் தெளிவுறப் பயின்று வந்துள்ளது. ஆனால், நான்காம் அடியிற் பயின்றுள்ள 'அஞ்சு' என்னும் எண்ணுப்பெயர், எவற்றைக்

குறிப்பிடுகின்றது என்பது தெளிவாகப் புலப்படவில்லை. ஒரு சிலர் "ஆனஞ்சும் ஆடினன்காண்" என்றும், "அஞ்சுகொலாம் அவர்ஆடின தாமே" என்றும் ஆங்காங்கே பல இடங்களில் தேவாரப் பாடல்களில் பாடப்பெற்றிருப்பதனால், 'ஆனஞ்சு கொண்டு ஆட்டப் பெறுதலினால் பொலிந்த சென்னி' என்று பொருள் கொண்டுள்ளனர். அதில்தவறு இல்லையாயினும், ஆனஞ்சு ஆட்டப் பெறுதலால், சிவபிரானின் திருமேனி, முழுவதுமே பொலிவுறுவதாகக் கொள்ளாமல், அவர்தம் சென்னிமட்டுமே பொலிவதாகக் கூறுவது பொருந்துமோ? என்ற ஐயப்பாடு நேர்கின்றது.

வேதத்திற்கு வேதமே பிரமாணம் :

இந்த ஐயப்பாட்டினை நீக்கிக் கொள்ள, வேதத்திற்கு வேதமே பிரமாணம் ஆகும்' என்னும் முறைமை பற்றி, அப்பர் பெருமான் அருளிச் செய்த தேவாரத் திருப்பாடல்களை முழுவதாக ஓதி ஆராயும்பொழுது, ஒரு சிறிது ஒளியும் தெளிவும் ஏற்படுகின்றது.

'அஞ்சினால் பொலிந்த சென்னி' என்னும் தொடரால் இறைவனின் சென்னியில் ஐந்து பொருள்கள் இடம் பெற்றுள்ளன என்று தெரிகின்றது. அந்நிலையில், இறைவனின் சென்னியைப் பொலிவிக்கும் ஐந்து பொருள்கள் யாவை? என்னும் சிந்தனை எழுகின்றது. அச் சிந்தனையின் பயனாக, நமது இறைவனின் சென்னியில் "கொன்றை – வெண்தலை கங்கை – அரவு – பிறை" என்னும் ஐந்து பொருள்கள், நிலையாகவும் சிறப்பாகவும் இடம்பெற்றுள்ளன என்பது விளங்குகின்றது. இவ்விளக்கத்திற்குத் துணை செய்வது, திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்துள்ள ஒரு திருப்பாடலே யாகும்.

திருஒற்றியூரர் திருமுடி :

சிவபிரானின் திருமுடியாகிய சென்னி தன்கண் இடம்பெற்றுள்ள கொன்றை மலரால் முல்லை நிலமாகவும், வெண்தலையினால் மயானம் என்னும் சுடலைக்களரியாகவும், கங்கை நதியினால் அது சென்று சேருகின்ற கடலாகவும், அரவு என்னும் பாம்பினால் அது வாழ்கின்ற புற்றாகவும், பிறைச் சந்திரனால் அது தங்கியுள்ள ஆகாயம் என்னும் வான்வெளியாகவும், ஒருசேரத் திகழ்கின்றதாம். 'பலபடப் புனைவு அணி' என்னும் அணிநலம் அமைய, இக்கருத்தினைப் பின்வருமாறு பாடியருள்கின்றார் திருநாவுக்கரசர்.

“ அங்கட் கடுக்கைக்கு முல்லைப்புறவம்; முறுவல்செய்யும்
பைங்கண் தலைக்குச் சுடலைக் களரி; பருமணிசேர்
கங்கைக்கு வேலை; அரவுக்குப் புற்று; கலைநிரம்பாத்
திங்கட்கு வானம் திருஒற்றி யூரர் திருமுடியே ”

திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்த, இனிய இத் திருப்பாடலால், சிவபெருமானின் திருமுடியாகிய சென்னியில்: கொன்றைமலர் – பைங்கண் வெண்தலை – கங்கைநதி –வாளரவு– இளம்பிறை என்னும் ஐந்து பொருள்கள், நிலையாகவும் சிறப் பாகவும் இடம்பெற்றுள்ளமை, தெற்றெனத் தெரிகின்றது.

“ பாம்புரிஞ்சி, மதிகிடந்து, திரைகள் ஏங்கப்,
பனிக்கொன்றை, சடைவைத்தார் … ” (1)

“ தலையேநீ வணங்காய் – தலை மாலை தலைக்கு அணிந்து
தலையாலே பலிதேரும் தலைவனைத் தலையேநீ வணங்காய்” (2)

என்பன போன்ற பிற பற்பல பாடல்களாலும், நமது இறை வனின் திருமுடியில், இவ் ஐந்து பொருள்களும் செவ்விதின் இடம்பெற்றுத் திகழ்தல் தெளியப்படும்.

அஞ்சிறுற் பொலிந்த சென்னி:

(1) கொன்றை மலரால் சிவபெருமானே பிரணவப் பொரு ளாகத் திகழ்கின்றான் என்பதும்; (2) பைங்கண் வெண்தலை யால், சிவபெருமான் சர்வ சங்கார காரணனாய் நித்தியத்துவம் என்னும் அழியாத் தன்மை பெற்றுப் பிறங்குபவர் என்பதும்; (3) ‘நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தான்’ என்றபடி, ஆயிரமாம் முகத்தினோடு பெருகிவந்த மாயிருங் கங்கையாற்றைத் தம் சடையில் ஏற்றுப் பொதிந்துகொண்டு அடக்கியதனால், சிவ பெருமான் அளவிலாப் பேராற்றல் உடையவர் என்பதும்; (4) அருவருக்கத் தக்க கொடிய அரவினையும் ஏற்று அணிந்து மகிழ்ந்ததனால், எத்தகைய சிற்றுயிர்க்கும் இரக்கம் காட்டி யருளும் கருணைத் திறம் மிக்கவர் என்பதும், (5) தன்பாற் புகலடைந்து அடைக்கலம் புகுந்த சந்திரனின் குற்றங்களை யெல்லாம் பொறுத்தருளித் தம் காலில் வீழ்ந்து அவனை, தம் தலையின்மேல் எடுத்து அணிந்து கொண்டதனால், அடைக்கலம் புகுந்தவரையெல்லாம் போற்றிப் பாதுகாத்துப் பெரிதும் தண்ணளிசெய்து அருள்பவர் சிவபெருமான் என்பதும், பிறவும் விளங்குகின்றன. இங்ஙனம் தம் சிறப்பியல்புகள் பலவும்,

உலக மக்களுக்கு விளங்கும் வண்ணம், இவ் ஐந்து பொருள்களையும், தமது சென்னியில் ஏற்று அணிந்து கொண்டிருந்தனால், சிவபெருமானது சென்னியினை, " அஞ்சினுற் பொலிந்த சென்னி " என்று அப்பர் பெருமான் பாடியருளினர் எனக்கொள்ளுதல் பொருந்தும்.

முடிவுரை: பாடலின் தெளிபொருள்:

எனவே, மேற்குறித்த திருநாவுக்கரசரின் திருநேரிசைச் செய்யுளுக்குப் பின்வருமாறு பொருள்கொள்ளுதல் நேரிதாகும்:

" நிலம் நீர் தீ வளி வெளி என்னும் ஐந்து பூதங்களால் அமைக்கப்பெற்ற உடம்பினை அடைந்து, அதன் உள்ளே வாழுகின்ற மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளால் துன்புறுத்தப்பட்டு, இவ்வுலகத்தில் அலைந்து திரிந்து வருந்திக்கொண்டிருக்கின்ற அறிவில்லாதவன் ஆகிய எனக்கு, நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தினுல், வாழ்க்கையை நடத்திச் செலுத்துகின்ற முறையினை உணர்த்தித் தெரிவித்தருளிய நின்னுடைய திருவருளால், யான் என்னுடைய அச்சங்கள் நீங்கப்பெற்றேன்; கொன்றைமலர் வெண்தலை கங்கைநதி அரவு பிறை என்னும் ஐந்து பொருள்களால் அழகு பெற்ற சென்னியை உடைய திருவதிகை வீரட்டப் பெருமானே " என்பது, இப் பாடலின் இனிய தெளிபொருளாகும்.

" அஞ்சினுல் இயற்றப் பட்ட ஆக்கைபெற்று, அதனுள் வாழும்
அஞ்சினுல் அடர்க்கப் பட்டிங் குழிதரும் ஆதனேனை,
அஞ்சினுல் உய்க்கும் வண்ணம் காட்டினுய்க்கு, அச்சம் [தீர்ந்தேன்;
அஞ்சினுற் பொலிந்த சென்னி அதிகைவீ ரட்ட னிரே "

திருக்கன்ருப்பூர் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

திருக்கன்ருப்பூரும், திருவலிவலமும் சமய உலகில் புகழ் பெற்ற தலங்களாகும். சமய சாதனங்களைக் கைக்கொண்டு இறைவன்பால் அன்புடையவர் யாவராயினும் அவரை இறைவனுகவேகருதி வழிபடும் தொண்டர்களின் உள்ளங்களில் சிவபெருமான் விளங்குவான் என்ற கருத்தமைந்த ‘எவரேனும் தாமாக’ என்னும் திருத்தாண்டகப் பாடலை அறியாத சைவர்கள் இரார். அப்பாடல் திருக்கன்ருப்பூர் இறைவன்மீது அப்பர் பெருமான் அருளியதாகும். திருமுறைகளை ஓதத்தொடங்கும் சைவ மெய்யன்பர்கள் விநாயகர் துதியாக ஓதும் ‘பிடியதன் உருஉமை கொள’ எனத்தொடங்கும் தேவாரம் திருவலிவலத்து இறைவர் மீது திருஞானசம்பந்தர் அருளியதாகும். அன்பர்கள் பலராலும் நினைந்து வழிபடும் இவ்விருதலங்களும் தஞ்சை மாவட்டத்தில் திருவாரூருக்கு அருகில் உள்ளன.

1. திருக்கன்ருப்பூர்

ஆரொருவர் தன்னை நினைந்து அன்போடுதொழுகிருர்களோ அவர்கள் வழிபடும் உருவில் இறைவன் வெளிப்பட்டு அருளுவான் என்று கூறும் அப்பர்பெருமான் திருவாக்கிற்கு இலக்கியமாக விளங்குவது திருக்கன்ருப்பூர். கன்றுகட்டும் தறியைச் சிவலிங்கமாகப் பாவித்து வழிபட்ட பெண்ணுக்கு இறைவன் வெளிப்பட்டு அருள்புரிந்ததலம்இது. மக்கள்வழக்கில் இவ்வூர், கோயில் கண்ணுப்பூர் என வழங்கப்பெறுகிறது.

இத்தலம் திருவாரூர் திருத்துறைப்பூண்டி புகைவண்டிப் பாதையில் உள்ள மாவூர் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 6. கி. மீ. தூரத்தில் உள்ளது. மாவூரிலிருந்து கிழக்கே 5. கி. மீ. தொலைவில் உள்ளது. வெள்ளையாற்றின் கரைவழியே பேருந்துச்சாலை செல்கிறது.

திருவாரூரிலிருந்து புறப்படும் எண் 18 நகரப்பேருந்தில் சென்ருல் கண்ணுப்பூரில் இறங்கலாம். பேருந்து நிற்குமிடத்திற்கு வடக்கே 2. கி. மீ. தூரத்தில் கோயில் உள்ளது. எண் 5

நகரப்பேருந்தால் நாகனூரில் இறங்கிதெற்கே 1½ கி. மீ. வந்தால் கோயிலை அடையலாம். கச்சனத்திலிருந்து கீழ்வேளூர் செல்லும் பேருந்துகளில் ஏறிச் சாட்டியக்குடியில் இறங்கியும் வரலாம். திருவாரூர்–கொளப்பாடு எண் 18ல் வருவதே இவ்வூருக்கு மிக அருகாமையில் இறங்குதற்கு ஏற்றதாகும். திருக்கண்ணுப்பூர் தஞ்சை மாவட்டம் திருவாரூர் வட்டத்தைச் சேர்ந்த கிராமம். வெள்ளையாறு பாண்டவ ஆறுகள் இவ்வூருக்கு வளம் தருகின்றன.

அருகிலுள்ள தலங்கள் :

கன்ருப்பூருக்குக் கிழக்கே 3. கி. மீ. தூரத்தில் திருச்சாட்டியக்குடியும், மேற்கே 5. கி. மீ. தூரத்தில் திருநாட்டியத்தான்குடியும், தெற்கே 3. கி. மீ. தூரத்தில் திருவலிவலமும் உள்ளன. திருச்சாட்டியத்தான்குடி திருவிசைப்பாத் திருப்பதிககம் பெற்ற தலம். ஏனையவை தேவாரத் திருப்பதிகம் பெற்றவை.

தலப் பெருமை :

சிவத்தலங்களல் பலவற்றிலும் மேம்பட்டது திருக்கன்ருப்பூர். இத்திருத்தலத்தை வழிபடுவோர் எல்லாச் சிவத்தலங்களையும் வழிபட்டபயனைப் பெறுவர். இத்தலத்தில் தங்கி அறம்புரிவோர் நல்ல மனைவாழ்க்கையைப் பெறுவர். இத்தலத்தின் பெயரை ஒருமுறை சொன்னலே பாவம் கெடும்; நோய் நீங்கும், நல்வாழ்வுகிட்டும் எனத் தலபுராணம் கூறுகிறது. இத்தலத்து இறைவர் கன்றுகட்டும் ஒருதறியிலிருந்து சுயம்புமூர்த்தியாகத் தோன்றியவராதலின் நடுதறிநாதர் எனப்பெறுகிருர். தலம் கன்ருப்பூர் எனப்படுகிறது.

சைவப் பெண்ணெருத்தி வைணவ ஆண்மகனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தும் தனது சிவபத்தியைக் கைவிடாது தன் கணவனும் அவனது வீட்டிலுள்ளோரும் அறியாதபடி மாட்டுத் தொழுவத்தில் மறைவாக கன்று கட்டும் தறியைச் சிவலிங்கமாகப் பாவித்து வழிபட்டு வந்தாள். இதனை உணர்ந்த கணவன் அந்நடுதறியைக் கோடரியால் வெட்டியபோது அந்நடுதறியிலிருந்து சிவபெருமான் இரத்தம் பீறிடச் சிவலிங்கமாக வெளிப்பட்டருளினர் என்பது இத்தலத்தின் சிறப்பு வரலாறு. நடுதறிநாதர் திருமுடியில் கோடரியின் வெட்டுக்காயம் இன்றும் உள்ளதைக் காணலாம். இடும்பன் என்னும் அசுரன் இத்தலத்தில் நடுதறிநாதரைவழிபட்டு அருள்பெற்றுள்ளான். திருநாவுக்கரசர் அருளிய அரியதொருதிருத்தாண்டகப்பதிகத்தைஇத்தலம்

பெற்றுள்ளது. சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 120 ஆவது தலமாக எண்ணப்பெறுவது.

கோயிலமைப்பு :

கன்ருப்பூர் சிறிய கிராமம். அண்மையில் (5—9—82) மகா கும்பாபிடேகம் நிகழ்ந்து புதுப்பொலிவோடு கோயில் விளங்கு கிறது. கிழக்குநோக்கியசந்நிதி எதிரே சிவதீர்த்தம் எனப்படும் திருக்குளம் உள்ளது. கோயிலேச்சூழ நான்கு திருவீதிகள். உள்ளன. கோயில் இரண்டு திருச்சுற்றுகளே உடையது கோயில்வாயிலில் வெளிப்பிராகாரத்தில் அலுவலகம் உள்ளது.

இரண்டாவது வாயிலில் மூன்று நிலேகளே உடைய இராஜ கோபுரம் கோவிலுக்கு அழகுசேர்க்கிறது. கோபுரவாயிலேக் கடந்து உள்ளேசென்ருல் முதற்பிராகாரம். நாட்டுக்கோட்டை நகரத்தாருள் தேவகோட்டை முத்து. க. அ. ராமசெட்டியார் அவர்களின் கருங்கல் திருப்பணியைப்பெற்றது. கருப்பக்கிரகம் உயரமான அமைப்புடன் அழகுற அமைந்துள்ளது.

முதல்திருச்சுற்றில் சுவாமிசந்நிதியில் கொடிமரவிநாயகரைக் கும்பிட்டு வலமாகவந்தால் மேற்கே திருமாளிகைப்பத்தியில் தல விநாயகர், சுந்தரேசுவரர், அறுவகை விநாயகர் விளங்கு கின்றனர். நடுவே திருப்புகழ் பெற்ற திருமுருகன் வள்ளி தெய்வயானே அம்மையாரோடு காட்சிதருகிருர். பிடாரி, ஜேஷ்டாதேவி, ஐயனுர், கற்பகநாதர் முதலியோர் எழுந்தருளி யுள்ளனர். அடுத்து கஜலக்ஷ்மி விளங்குகிருர்.

வடக்கே சண்டேசுவரர் கோயில் உள்ளது. கிழக்கே பைரவர் நவக்கிரகங்கள் சமயாசாரியர் விளங்குகின்றனர். கோஷ்டங்களில் தெற்கே தெக்ஷிணுமூர்த்தி, மேற்கே இலிங் கோத்பவர், வடக்கே பிரம்மன், அடுத்து துர்க்கை ஆகியோர் விளங்குவதைக்காணலாம். திருக்கோயில் ஆஸ்தானமண்டபம், மகாமண்டபம். அர்த்த மண்டபம், கர்ப்பக்கிரகம் என்ற அமைப்பிலுள்ளது. ஆஸ்தான மண்டபத்தில் அம்பிகை சந்நிதி உள்ளது. அன்னே மாதுமைநாயகி தெற்கு நோக்கி விளங்கு கிருள்.

சுவாமி சந்நிதியின்வாயிலில் இத்தலத் தேவாரப்பதிகக் கல்வெட்டுள்ளது. சந்நிதியின் இருபுறமும் விநாயகர், பால முருகன் எழுந்தருளியுள்ளனர். மகாமண்டபத்தில் திருவுலாப் போகும் அருள்மிகு சோமாஸ்கந்தருள்ளிட்ட பஞ்சமூர்த்திகள்

ஸ்ரீ நடராஜர் சிவகாமியம்மன் முதலியோர் எழுந்தருளியுள்ளனர். சுவாமி சந்நிதியில் துவாரகணபதியை வழிபட்டு அருள்மிகு நடுதறிநாதரைத் தரிசிப்போம்.

அப்பர்பெருமான் அகமுருகிப் பாடிய அருள்மிகு நடுதறி நாதரை நாமும் வழிபடும்போது நம் நெஞ்சு நெக்குருகுவதைக் காணலாம். கன்றுகட்டும் தறியிலிருந்து வெளிப்பட்ட இம்மூர்த்தியை மனமுருகி வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடைவோம். அருள்மிகு மாதுமைநாயகி, கருணையின் வடிவமாய்க் காட்சி தருகிறாள். அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத இவ்வன்னையை வழிபடும்போது மைந்தனின் வேண்டுகோளை ஏற்று நிறைவேற்றித்தரும் தாயாக அம்பிகையைக் கருதும் மனநிலையை நாம் அடைவோம்.

மூர்த்திகள் :

இறைவர்திருப்பெயர் அருள்மிகு நடுதறிநாதர். தேவாரத்தில் இப்பெயர் பாடல்தோறும் குறிக்கப்படுவதையும், இத்தல வரலாற்றில் நடுதறியில் தோன்றிய மூர்த்தியாக இறைவர் குறிக்கப்படுவதையும் காணலாம். அம்மைபெயர் அருள்மிகு மாதுமைநாயகி. மாதினை ஓர் கூறுகந்தாய் என அப்பர் அம்மையைப் போற்றிப் பாடுவதைக் காணலாம். தலமரம் கல்பனை எனக்கூறப்படுகிறது. மழைக்காலங்களில் கோயிலில் கல்லிடையே தானே தோன்றி வேனிலில் மறையும் கல்பனையே இத்தலத்திற்குரிய மரம் எனக்கூறுகின்றனர். தீர்த்தம் – சிவகங்கை கருணாமிர்தம் ஞானாமிர்தம் ஞானகூபம் ஆகியன.

புராண வரலாறுகள்

இறைவன் நடுதறிநாதராய்த் தோன்றியது ;

திருக்கயிலாயத்தில் சுதாவல்லி என்னும் பெயருடைய வித்தியாதரப் பெண்ணொருத்தி பின் விளைவறியாது உமையம்மையின் உருவந்தாங்கி ஆடியும் பாடியும் இறைவனுக்கு மகிழ்ச்சி உண்டாக்கினாள். இதைக்கண்ட உமையம்மை சினந்து சுதாவல்லியை நோக்கி எனது உருவத்தை ஏற்று நடித்து இறைவரை மயக்க முற்பட்ட நீ மனிதவடிவோடு மண்ணுலகிற் பிறப்பாயாக என்று சபித்தார், சுதாவல்லி கண்கலங்கி தன் பிழை பொறுக்குமாறு உமையம்மையை வேண்டினாள். அம்பிகை சினம்தணிந்து மண்ணுலகிற்பிறந்து வாழ்ந்து சிவபெருமானைப் பூசித்து நம்மை அடைவாயாக என அருள்புரிந்தார்.

சுதாவல்லி இறைவியின் ஆணைப்படி திருக்கன்றுப்பூரில் சைவவேளாளர் ஒருவருக்குப் புதல்வியாய்ப்பிறந்து கமலவல்லி என்ற பெயருடன் வாழ்ந்து வந்தாள். ஊழ்வினைப்பயனால் இடையருது சிவபெருமானை நினையும் பேறு பெற்றுச் சிவபூசை செய்துவந்தாள். திருமணப் பருவத்தை அடைந்த கமலவல்லி யைப் பெற்றோர் அவ்வூரிலேயே வைணவன் ஒருவனுக்குத் திருமணம் புரிவித்தனர். கமலவல்லி காரைக்காலம்மையாரைப் போலச் சிவபெருமானிடம் தான் கொண்ட பக்தி மாருமல் சிவபூசை புரிந்துவந்தாள். அவள் கணவன் கமலவல்லியின் செயலை அறிந்து அவள் அறியாதவாறு அவள் பூசித்துவந்த சிவலிங்கத்தைக் கிணற்றில் எறிந்துவிட்டான். கணவனது செயலை அறிந்த கமலவல்லி இனி தன் கணவனும் அவனது குடும்பத்தாரும் அறியாதவாறு சிவபெருமானைப் பூசிப்பதே தக்கது என உணர்ந்து மாட்டுத்தொழுவத்தில் கன்றுகட்டும் தறியைச் சிவலிங்கமாகக் கருதிப் பூசித்து வந்தாள். தன் கருத்துக்குமாருகக் கமலவல்லி நடப்பதை அறிந்த அவள் கணவன் சினந்து கன்றுகட்டும் தறியைக் கோடரியால் வெட்டினன். தறிபிளந்தது. உதிரம்வெளிப்பட்டது. இறைவன் கமல வல்லியின் பக்தியை வெளிப்படுத்த அத்தறியிலிருந்து இலிங்க வடிவத்தோடு வெளிப்பட்டுக் காட்சிதந்து அருள்புரிந்தான். கமலவல்லியும் அவளை மணந்த வைணவனும் சிவலோகமடைந் தனர். நடுதறியிலிருந்து சுயம்புமூர்த்தியாக வெளிப்பட்டதால் அச்சிவபெருமானுக்கு அன்பர்கள் திருக்கோயில் எடுத்து வழி பட்டனர். அதுமுதல் ஊர் கன்றுப்பூர் என்றாயிற்று. இறைவன் நடுதறிநாதர் என வழங்கப்பெற்றார். இறைவன் திருமுடிமீது வைணவன் கோடரியால் வெட்டிய வடு இன்றும் உள்ளது.

உமையம்மை வந்த வரலாறு :

இறைவனும் இறைவியும் கயிலைமலையில் வீற்றிருந்தபோது இறைவி, பெருமான் கண்களைத் தமது திருக்கரங்களால் பொத்தினள். சூரியன், சந்திரன், நெருப்பு ஆகியவை இறைவனது மூன்று திருவிழிகளாக விளங்குவதால் அம்மை கண் பொத்திய நேரத்தில் அனைத்துலகும் இருண்டது. கயிலைமலையிலும் இருள் சூழ்ந்தது. அம்பிகை அஞ்சிக் கையை எடுத்தாள். எங்கும் ஒளி பரவிற்று. இறைவி கண்பொத்திய அவ்வொரு கணநேரம் அனைத்துலகிற்கும் பல்லூழியாயிற்று. உலகில்உயிர்களனைத்தும் இருளில் அழுந்தித் துயருற நேர்ந்தது. பெருமான் உமையம் மையை நோக்கி, உலக உயிர்கள் பன்னெடுங்காலம் துயருறும் படிச் செய்த நீ மண்ணுலகம் சென்று கன்றுப்பூரில் நம்மைப் பூசித்து நம்பால் வருவாயாக என்றார். அம்பிகை கன்றுப்பூரை

அடைந்து பாண்டவ ஆற்றின் கரையில் மண்ணால் சிவலிங்கம் அமைத்து சிவபெருமானைப் பூசித்துவந்தாள். பெருமான் அன்னையின் அன்புப்பெருக்கை உலகவர் உணருமாறு ஆற்றில் வெள்ளம் பெருகிவரச்செய்தார், அம்பிகையின் பூசையி னிடையே ஆற்றில் வெள்ளம் பெருகிச் சிவலிங்கத்தைத் தீண்டுவதைக்கண்டு சிவலிங்கத்தைத் தம்மார்போடு இருகரங் களாலும் எடுத்து அணைத்தாள்.

தழுவக்குழைந்தபெருமான் அம்மைக்குத் தண்ணருள் செய்து காட்சி கொடுத்து அன்னையை மணந்து மகிழ்ந்தார். தாம் திருமணம் கொண்ட கன்றாப்பூரில் என்றும் அம்மையும் தானுமாய் எழுந்தருளியிருந்து அருள் வழங்கி வருகின்றார். இவ்வரலாறு காஞ்சிபுரத்தில் அம்பிகை இறைவனை வழிபட்ட வரலாற்றோடு ஒத்துள்ளது.

இடும்பன் வழிபட்டது :

காம்பிலி தேசத்தில் இடும்பன் என்றொருவன் மனை வாழ்க்கை நடத்திவந்தான். இவன் முனிவர்களையடுத்து நல்லுப தேசங்கள் கேட்டு அதன்படி ஒழுகிவந்தான். தனக்கு மகப் பேறில்லாக் குறையைப் பராசரமுனிவரிடம் விண்ணப்பித்தான். முனிவர் தென்னாட்டில் உள்ள திருக்கன்றாப்பூரை அடைந்து சிவதீர்த்தத்தில் நீராடி நடுதறிநாதரை வழிபடின் நன்மகப்பேறு வாய்க்கப் பெறுவாய் என்றார். முனிவர்சொற்படி இடும்பன் இத்தலத்திற்குவந்து நீராடி இறைவனை வழிபட்டான். மகப் பேறு வாய்த்தது. மகிழ்ந்த இடும்பன் நடுதறிநாதர்கோயிலைப் புதுப்பித்து திருவிழாக்கள் நிகழ்த்தித் தன் நகரம் திரும்பினான்.

பாண்டவர் காலத்து இடும்பனும் இவ்வாறே தன் கண் ணொளியைஇழந்து முனிவர் ஒருவர் அறிவுரைப்படி இத்தலத்தை அடைந்து வழிபட்டுக் கண்நோய் நீங்கப்பெற்றனன் எனக் கூறப்படுகிறது.

தர்மசர்மா சாபம் நீங்கியது :

மாளவதேசத்தில் வாழ்ந்த மேதாவி முனிவர் சுதன்மா என்னும் முனிவர் செய்த வேள்விக்குச் செல்லுமுன் தனது பசுக் களைப் பாதுகாத்துவருமாறு தன்மாணவர் தர்மசர்மா என்பவரை அழைத்துப் பணித்துச் சென்றார். தர்மசர்மா பசுக்களை நன்கு பராமரிக்காமையால் திரும்பிவந்த மேதா முனிவரின் சாபத்தால் தர்மசர்மா நாயுருவம் பெற்றார். காலவ முனிவர் அறிவுரைப்படி

தர்மசர்மா நாயுருவோடு கன்ருப்பூர் வந்து சிவதீர்த்தத்தில்நீராடி நாயுரு நீங்கித் தன் குருநாதரை அடைந்தார்.

தேவாரச் சிறப்பு :

இத்தலத்துக்கு அப்பர் அருளிய திருத்தாண்டகத் திருப் பதிகம் ஒன்றும், இரண்டு தனித் திருத்தாண்டகப் பாடல்களும் உள்ளன. திருப்பதிகத்தில் அன்போடும், ஆர்வத்தோடும் தொழும் அடியவர் உள்ளத்தைக் கன்ருப்பூர் இறைவன் இடமாகக் கொண்டருளுவான் எனப் பதிகப்பாடல் கூறுகிறது. பாடல்கள் தோறும் 'அடியார் நெஞ்சினுள்ளே கன்ருப்பூர் நடுதறியைக் காணலாமே' என்ற தொடரே மகுடமாகவருகிறது. இத்திருப்பதிகப் பாடல்களில் 1, 2, 3, 7, ஆகியன பலராலும் பலகாலும் எடுத்தாளப்படுவன. திருப்பதிகத்தின் 9 ஆம் பாடல் கிடைத்திலது. தனிப்பாடல்களில் க்ஷேத்திரக் கோவைத் திருத் தாண்டகம் கன்ருப்பூரில் கயிலாயநாதனைக் காணலாம் என் கிறது. தலையாலங்காட்டுத் திருப்பதிகத்தில் அப்பர் கன்ருப்பூர் இறைவனைச் சாராது பல நாட்கள் கழித்தேனே என்று இரங்கிப் பாடுதலைக்காணலாம்.

திருவிழா :

கன்ருப்பூர் கிராமம் முழுவதும் நடுதறிநாதர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களின் பட்டா, இவ்வூர் இறைவன் பெயரால் உள்ளன. ஐந்துகாலபூசை நிகழ்கிறது. வைகாசி விசாகத்தில் மூன்று நாட்கள் பெருவிழா நடைபெறுகிறது. இக்கோயிலில் விளங்கும் மாரியம்மைக்கு சித்திரை மாதத்தில் பத்து நாட்கள் விழாநிகழ்கிறது.

அண்மையில் 5—9—82 அன்று திருக்கோயில் புதுப்பிக்கப் பெற்று மகாகும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றுள்ளது.

மாதினையோர் கூறுகந்தாய் மறைகொள் நாவா
    மதிசூடி வானவர்கள் தங்கட் கெல்லாம்
நாதனே யென்றென்று பரவி நாளும்
    நைஞ்சுருகி வஞ்சகமற் றன்பு கூர்ந்து
வாதனையால் முப்பொழுதும் பூநீர் கொண்டு
    வைகல் மறவாது வாழ்த்தி யேத்திக்
காதன்மையால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
    கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே.

கட்டுரை எண். 31

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A,. D. U. N., I. U.

அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண்டாய் கொண்ட
[தல்ல வென்கை
நன்றே உனக்கு? இனிநான் என்செயினும், நடுக்கடலுள்
சென்றே விழுகினும், கரையேற்றுகை நின் திருவுளமே;
ஒன்றே! பலவுருவே! அருவே! என் உமையவளே. 30

அ. ஒன்றே!

(1) ஒருருவான தனிப் பொருளே!

(2) ஒப்பற்றதாயும். தனித்தன்மையுடையதாகவும் அனைத்தினின்றும் வேறுபட்டதாயும் உள்ள பராசக்தியை 'ஒன்றே' என்கிறார்.

(3) சிவசக்தி ஐக்ய சொரூபிணியான, சிவசக்தி ஒன்றான மூர்த்தியாதலால் ஒன்றே என்கிறார்.

(4) ஸ்தாவரஜங்கமம் என்னும் அசையாத, அசையும் அனைத்துப்பொருள்களாகவும் அவளே நிறைந்து 'பிரபஞ்ச' மென்னும் ஒன்றாகவே தோன்றுவதால் ஒன்றே என்கிறார்.

(5) கூறுபோட முடியாததாயும், தேசகாலவர்த்தமானங்களால் மாறாததுமாய் உள்ள முழுமையான -- பூரணமான 'வஸ்த்து' வை ஒன்றே என்கிறார்.

(6) "ஏகம் பிரம்மம்" என்றபடி பரம்பொருள் ஒன்றே என அனைவராலும் குறிப்பிடப்படும் அந்த ஒன்றாக இருப்பவளை 'ஒன்றே' என அழைக்கிறார்.

(7) கூட்டு ஒருவரையும் வேண்டாது, "நிஷ்பரிக்ரஹா" அதாவது உதவியாள் யாரும் இல்லாதவள் என்ற நிலையில் நின்று அனைத்தையும் இயக்கும் மூலகாரணமான ஒன்றினை 'ஒன்றே' என அழைக்கிறார்,

(8) தனது வழிபடுதெய்வமாக – ஒரே தெய்வமாக ஏற்றுக் கொண்ட, தனது இன்பதுன்பங்களில்தனித்த ஒரே துணையாகக் கருதுபவளை ஒன்றே என்கிருர்.

ஆ. பலவுருவே!

(1) பல வடிவங்களாக இருப்பவள் எனவும் அழைக்கிருர்

(2) தனித்துநிற்கும் தானே உலகில் காணப்படும் பலவடிவங்களாக விரிந்து நிற்றலின் 'பலவுருவே' என்கிருர்.

(3) ஒன்ருன பராசக்தி, சிவசக்தி என இரண்டாகவும். இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி எனவும், துர்க்காலட்சுமி, சரஸ்வதி எனவும், சப்தயோகினிகள் எனவும் அஷ்டமாதாக்கள் எனவும், நவசக்திகள் எனவும் தசமாஹாவித்தைகள் எனவும் பலவாறு விரிந்து நிற்பவளை "பலவுருவே!" என அழைக்கிருர்.

(4) மற்றும் பிரம்மரூபா எனவும் கோவிந்தரூபிணி எனவும், ருத்ரரூபா எனவும், ஈச்வரி எனவும், சதாசிவா எனவும் சகஸ்ர நாமம் குறிப்பிட்டபடி பஞ்சப்பிரம்மங்களின் வடிவாய் விரிந்து நிற்றலான் "பலவுருவே" என்ருர்,

(5) அவள் பலவடிவானவள் என்பதை சகஸ்ரநாமம் 'பஹுரூபா' எனவும் 'விவிதாகாரா' எனவும் குறிப்பிடுகிறது.

(6) புறக்கரணங்களால் காணக்கூடிய வடிவாகவும் அவ்வாறு காணவியலாத மின்சத்தி நுண்ணலைகள் போன்ற சக்திகளின் வடிவிலும் ஆக பல வடிவந்தாங்குவதால் பலவுருவே என்ருர்.

இ. அருவே!

(1) உருவமேதுமில்லா அருவநிலையில் இருப்பவள்,

(2) நமது அறிவுக்கு எட்டும்வகையில் தன்னைக் காட்டிக் கொள்ள இறைவன் பல பல வடிவந்தாங்கி அருளுகின்ருன். ஆனல் உண்மையில் இறைவன் உருவமும் பெயரும் குணமும் கடந்தவன், அந்நிலையிலுள்ள இறைவனை "நிர்க்குணப் பிரம்மம்" என்பர். அந்த நிர்க்குணப்பிரம்ம நிலையில் நின்ற அம்பிகையினை 'அருவே' என்ருர்.

(3) அருவநிலையில் இருக்கும் அம்பிகையினை சகஸ்ரநாமம் பல நாமங்களில் வருணிக்கிறது, அவற்றுள் அருவமானவள் எனக் கூறும் நாமம் 'நிராகாரா' – 'வடிவமில்லாதவள்' என்பதாகும்,

(4) "ஒன்றே என்னில் ஒன்றேயாம், பலவென்றுரைக்கில்
[பலவேயாம்
அன்றே என்னில் அன்றேயாம், ஆமென்றுரைக்கில்
[ஆமேயாம்
இன்றே என்னில் இன்றேயாம், உளதென்றுரைக்கில்
[உளதேயாம்
நன்றே நம்பிக் குடிவாழ்க்கை; நமக்கு இங்குஎன்னே
[பிழைப்பம்மா?"

என்ற கம்பராமாயண யுத்தகாண்ட காப்புச் செய்யுள் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

(5) " ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள்
நின்ற நன்றெழில் நாரணன் "

என்ற நம்மாழ்வார் பாடலும், இங்ஙனமே ஒன்ருய்ப் பலவாய் நிற்கும் தன்மையினைக் குறிப்பிடுகிறது.

ஈ. என் உமையவளே !

(1) உரிமையுடன் என் உமையவளே என அழைக்கிருர்.

(2) பக்திமேலிட்டால் இறைவனிடம் தனக்கென தனியுரிமை பாராட்டுவது பக்தர்களின் இயல்பு. ''எங்கரங்கநாதன்! எங்கசுவாமிநாதன்! எங்கமுத்தையா! எங்ககாந்திமதி'' என்றெல்லாம் தங்களுக்கு அதிக ஈடுபாடுள்ள தெய்வங்களைக் குறிப்பிடுவதை நாம் கேட்டிருக்கிறேம், அவ்வாறே பக்தனுக்கு சோதனை வரும்பொழுது "என்ன? உமது முத்தையன் இப்படி செய்துவிட்டான்? உமது காந்திமதி இப்படி செய்துவிட்டாள் என்று அங்கலாய்க்கும் வகையில் குறிப்பிட்ட தெய்வத்தினை குறிப்பிட்டவரின் தனியுரிமையாக்கிக் கூறுவதனையும் கேட்டிருக்கிறேம். அதேபோன்ற தனியுரிமையுடன் "என் உமையவளே" என அழைக்கிருர்.

(3) "எனது பெண் ஜானகியினை நீ கரம் பற்றினய், அதன் பலன் அல்லவா உனக்குப் பெருஞ்சிறப்புக்களையெல்லாம் தந்திருக்கிறது?" இவ்வாறு தன்னை ஜனகனின்நிலையில் கற்பனை செய்துகொண்டு இராமனையே வினவுகிருர் "மாஜானகி" (என் ஜானகி) எனத்துவங்கும் கீர்த்தனையில் தியாகராஜர். அதுபோல் தன்னை இமவான்நிலையில் கற்பனைசெய்துகொண்டு பட்டரும் " என் உமையவளே !" என அழைத்திருக்கலாம்,

(4) இமவான் பெற்றெடுத்த உமையவள் அவனல் தவம் வேண்டாம் எனக் கூறித் தடுக்கப்பட்டதனல் உமா எனப் பெயர்பெற்ருள். இங்கு என் உமையவள் செய்தது வேறு,

இவள் என்னை அன்றே தான் தடுத்து ஆண்டுகொண்டாள், அங்கு இமவான் தடுத்தனன். இங்கு இவள் என்னைத் தடுத்து ஆண்டாள். ஆகவே என் உமையவள் மாறுபட்டவள் என்பது போல் அமைகிறது இந்தவிளி.

உ. அன்றே தடுத்து என்னை ஆண்டுகொண்டாய் !

(1) அப்பொழுதே நீ என்னை வலியத் தடுத்து ஆண்டு கொண்டருளியிருக்கிருய்,

(2) நான் அன்னை வயிற்றில் கருவாய் வரும்பொழுதே என்னைத்தடுத்து ஆண்டுகொண்டாய். ஏனெனில் கருவாய் நான் வளர அன்னையின் ஊட்டச்சத்துக்களை எளிதில் ஏற்றுக் கொள்ள 'தொப்புள்கொடி'போன்ற அமைப்புக்களைஏற்படுத்தி உதவியது யார் ? நீதானே !

(3) அல்லது நான் இப்புவியில்வந்தவுடன்தடுத்து ஆண்டு கொண்டாய்! ஏனெனில் எனக்கு எல்லா உணவும் உதவாது என, கருணையினுல் உரியநேரத்தில் தாயின் மார்பகத்தில் பாலினைச்சுரக்கச்செய்து என்னைக் காத்தது யார் ? நீதானே !

(4) ஒரு குறிப்பிட்டநாளில் அபிராமி, பட்டரைத் தடுத்தாண்டு திருவடிதீட்சை கொடுத்திருக்கிருள். இதனை "வாசக் கமலம் தலைமேல் வலியவைத்து" என்ற அடியில் அகச்சான்ருகவே காண்கின்ருேம். அவ்வாறு ஆண்டுகொண்டு திருவடி தீட்சை கொடுத்தநாளினையே 'அன்று' எனக்குறித்திருக்கலாம்.

(5) எவரும் அறியா மறையினை அறிந்துகொண்டு அன்பர் பெருமை எண்ணுத கருமநெஞ்சினரைப் பிரிந்து சாக்த நெறி பற்றிய அந்தநாளினையே 'அன்று' எனக் குறித்திருக்கலாம்,

(6) "அன்றே எனதுஆவியும், உடலும் உடமையெல்லாம்
குன்றே அனையாய்! என்னை ஆட்கொண்டபோதே
[கொண்டிலையோ?'

என்பார் மணிவாசகர். இங்கும் திருப்பெருந்துறையில் ஒருநாள் அவன் குருந்தமரத்தடியில் ஆட்கொண்டிருந்த நிகழ்ச்சி ஒன்று இருப்பினும் 'அன்றே' என்ற சொல் பல பொருள் கொண்டு நிற்பதுபோல் பட்டரின் இச்சொல்லும் பல பொருள் குறித்தே நின்றது.

ஊ. கொண்டதல்ல வென்கை நன்றே உனக்கு?

(1) அவ்வாறு தடுத்தாட்கொள்ளவில்லை என்று கூறுதல் உனக்கு நன்ருகுமா? ஆகாது என்றவாறு.

(2) நீயே தடுத்து ஆண்டுகொண்டபின், 'இல்லை' என்று கூறி கைவிடுதல் உனது ஏற்றத்திற்கு – பெருமைக்கு அழகாகுமா என வினவுகிறார்,

(3) "'ஏ' இருவழியும் வினாவாகும்மே" என்ற இலக்கண நூற்பாவுக்கு எளிய சிறந்த எடுத்துக்காட்டாகும் "நன்றே?" என்ற வினாவில் வரும் "ஈற்று ஏகாரம்".

ஏ. இனிநான் என்செய்யினும் நின் திருவுள்ளமே!

(1) இனி நான் என்னசெய்தாலும், கடல் நடுவில் சென்று விழுந்தாலும் என்னைக் கரையேற்றிக் காக்கவேண்டியது உனது கடமையாகும்.

(2) ஆட்கொள்ளப்பட்ட அடியவர்கள் பிறகு, 'தங்களது' என்று எதுவுமின்றி அனைத்தும் இறைவன் செயலே என எண்ணுவர். ஆகவே அவர்கள் ஏதாவது இன்னலில் அகப்பட்டுக்கொண்டாலும், அவர்களை இறைவன் தானேமுன்னின்று காப்பான். அவ்வாறு காக்கவேண்டியது அவனது கடமையும் ஆகும். அதேவகையில் அபிராமிபட்டரும் "எனக்கு உள்ளவெல்லாம் உனதென்று அளித்துவிட்டேன்" என்ற நிலையில் இருப்பவர். ஆகவே நடுக்கடலுள் சென்றேவிழுகினும் அவள் காக்கவேண்டுமென்கிறார்.

(3) 'நடுக்கடல்' என்பது இங்கு "சம்சாரஸாகரம்" எனும் பந்தபாசமிக்க உலகியல் வாழ்வேயாகும் என்பர். ஆட்கொள்ளப்பட்டநான் தெரிந்தே உலகியல் மாயையில் விழுந்தாலும் மீட்டுக்காக்கவேண்டியது நின் திருவுள்ளத்தின் கடமையாகும் என்கிறார்.

மற்றும் 'நடுக்கடல்' என்றது திசையறிய முடியாத ஆழங்காணவியலாத – பயங்கரமான – பிறர் துணையின்றி மீளமுடியாத ஒரு நிலையாகும். அந்த பயங்கர நிலையில் இருந்து காப்பவள் அம்பிகை.

(4) 'சம்ஸார பங்க நிர்மக்ன ஸமுத்ரண பண்டிதா' அதாவது, 'சம்சார மென்னும் கடலில் மூழ்கிய மக்களைக் கரையேற்றுவதில் வல்லவள்' என சகஸ்ரநாமம் அழகாகப் புகழுகிறது.

(5) அன்றே நீ ஆண்டு கொண்டதனால் நீதான் இடையூறிலிருந்தும் காக்கவேண்டியவள் என மணிவாசகரும் கருதிக்கூறி,

"இன்றுஓர் இடையூறு எனக்கு உண்டோ ? எண்தோள்
 முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ
 இதற்கு நாயகமே ?"

என வினவுகிறார் அன்றோ ?

(6) பதுமைகளை இயக்கும் 'சூத்திரதாரி' போல் என்னை இயக்குவது கபடநாடகமாடும் நீ தான். ஆகவே நான் குற்றவாளியுமல்ல. குற்றமும் எனதல்ல என்கிறார் புரந்தரதாஸர்.

"அபராதி நானல்லா. அபராதமு எனக்கில்லா
கபடநாடக சூத்ரதாரி நீனே"

என்பது அவரது கீர்த்தனையாகும்.

(7) அன்றே ஆட்கொண்டாய். ஆகவே இனி அனைத்தும் உன் செயலே என்கிறார். மதுராபுரி அம்பிகை மாலையில் குலசேகரபாண்டியன்,

"குன்றே எனும் முலையார் தரும் காதற் கொடுமையெல்லாம்
வென்றேன், மறலியை விட்டு விட்டேன் விரை மலர்த்தாள்
என்றே என் சென்னி வைத்தாய் பின்னை யான் செய்யும்
 [ஏவலெல்லாம்
அன்றே உன் ஏவல் கண்டாய்! மதுராபுரி அம்பிகையே"

— மதுராபுரி அம்பிகைமாலை.

(8) தன் செயல் வேறு, இறைவன் செயல் வேறு என்று எண்ணாத இந்த நிலையினைப் பகவத்கீதை 'அனன்யம்' என்கிறது அதாவது இறைவனைத்தன்னினும் அன்னியவன் என எண்ணாது அவனே நான் என் செயல் அவன் செயலே என எண்ணியிருத்தல் ஆகும். இவ்வாறு எவன் எண்ணுகிறானோ அவனை நான் முன்னின்று காக்கிறேன் எனவும் கீதையில் கண்ணன் உறுதி மொழி கூறுகிறான்.

(9) இங்கு நடுக்கடலுள் 'விழுகினும்' என்னாது 'சென்றே விழுகினும்' எனக்குறிப்பிடுதல் கவனிக்கத் தக்க ஒன்றாகும். விமான ,விபத்தினாலோ, கப்பல் கவிழ்ந்ததினாலோ நான் நடுக்கடலில் விழுந்து நீ காப்பாற்றினால் அது கூட உனக்குப் பெருமையில்லை. ஆனால் நான் வேண்டுமென்றே நடுக்கடலுள் சென்று விழுந்தாலும் நீ காப்பாற்ற வேண்டும் என்பது போல் சென்றே விழுகினும் என்கிறார்.

(10) ‘அபிதான சிந்தாமணி’ யில் ஆசிரியர் திரு, A. சிங்காரவேலு முதலியார் அவர்கள் அபிராமி பட்டரின் வாழ்க்கைச் சுருக்கம் எழுது மிடத்தில் ‘பட்டர் சரபோஜி மன்னன் வந்தசமயம் திருக்கோயிலில் கையில் பஞ்சாங்க மொன்றினை வைத்தபடி அமர்ந்திருந்தார் என்றும் அதனைக் கண்டமன்னன் என்ன திதி எனக்கேட்டான் எனவும் குறிப் பிடுகிறார். கையில் பஞ்சாங்கத்தினை வைத்திருந்தும் ஒருவர் அமாவாசையினைப் பௌர்ணமிஎன்றால் அவரை உலகம்என்ன நினைக்கும்? பித்தர் அல்லது ‘திமிர் பிடித்தவர்’ என்று தானே நினைக்கும்?

ஆனால் அவரோ அன்னையின் சிந்தையில் இருந்ததால் அவ்வாறு கூறினார். அஃதன்றி தெரிந்தே கூட தவறாகக் கூறியிருந்தாலும் நிலவினைக் காட்டி என்னை இன்னல் இன்றிக் காக்கவேண்டியது உன்பொறுப்பு ஏனெனில் நீஎன்னை அன்றே ஆண்டு கொண்டு விட்டாய். எல்லாம் நின்செயலே என்பது தோன்ற நடுக்கடலுள் சென்றே விழுகினும் கரையேற்றுகை நின்திருவுளமே என்றார்.

(11) காளிதாசனை அம்பிகை அங்ஙனம் காத்த வரலாறும் ஒன்று உண்டு.

காளிதாசனின் புலமையினையும், அவனுக்கு மன்னன் அளித்த சிறப்புக்களையும் கண்டு பொறாமையுற்ற மற்ற புலவர்கள் எப்படியாவது மன்னனிடம் அவனுக்குள்ளமதிப் பினைமாற்றிவிட எண்ணினர்.

“தாசியர் வீட்டிலேயே தவங்கிடங்கும்காளிதாசனை மிகவும் கொண்டாடுகிறீர்களே இது தகுமா?” என மன்னனிடம் வினவினர்.

“அது அவனது சொந்தவிஷயம்” என்றார் மன்னன்.

இருக்கலாம்! அருட்கவிஞன் எனப்படும் அவன்உம்மோடு சரியாசனத்தில் அமரும் அவன், தாசிகளுக்காக எந்தத் தாழ்ந்த செயலையும் செய்யத் தயாராய் இருக்கிறான் இதுவும் அரசுக்கு அழகாகுமா?

“அப்படி அவன் என்னதான் செய்கிறான்?”

“மன்னரே! இன்றிரவு நீரேமாறு வேடத்தில் வாரும், பின் நடப்பதைப்பாரும்” என்றனர் புலவர்.

அவ்வாறே அன்றிரவு போஜமன்னன் மாறு வேடத்தில் காளிதாசனை இரகசியமாகப் பின்தொடர்ந்தான்.

புலவர்களிடம் பணம்பெற்றுக்கொண்ட தாசியொருத்தி காளிதாசனைத்தன் வீட்டு வாயிலிலேயே தடுத்தாள்.

“ புலவரே, நீர் இன்று ஆற்றங்கரைக்குச் சென்று புதிதாக – பெரிதாக சிலமீன்களை எனக்காகப் பிடித்து வந்து கொடுத்தால் தான் இன்று இரவு உமக்கு இங்கு அனுமதியுண்டு ” என்றாள்.

மாதர் மயக்கத்திலிருந்த மகாவிஞன் தூண்டிலுடன் ஆற்றங் கரைக்குப் புறப்பட்டு விட்டான்!

எழுத்தாணிபிடித்து அமரகாவியங்களைப் படைத்தகையில்! கேவலம்! ஒரு தாசிக்காக தூண்டில் பிடிக்கச் செல்கிறான் என மன்னன் வருந்தியபடிப் பின் தொடர்ந்தான்.

ஆற்றங்கரைக்குச் சென்றவன் அருமையான மீன்களைப் பிடித்தான்! ஆடையொன்றில் மூடிமறைத்து வைத்துக்கொண்டு வேகமாக வந்து கொண்டிருக்கிறான்.

மாறுவேடத்தில் பின்தொடர்ந்த போஜமன்னன் வழிமறித்து ‘ கவிஞரே இந்த இரவு வேளையில் எங்குச் சென்று வருகிறீர்?” என்றான்.

“இராமாயணச் சொற்பொழிவாற்றச் சென்று வருகிறேன்” என்றான் காளிதாசன்.

“ இராமாயணச் சொற்பொழிவிற்குச் சென்று திரும்பும் நீர் ஏதோமறைத்து வைத்திருக்கிறீரே? அதுஎன்ன?”

“அதுவா? வால்மீகி படைத்த மூலநூல் சுவடிகள்”

“ஏன் கவிஞரே! புளுகுகிறீர்? சுவடியில் இருந்து எங்காவது நீர்சொட்டுமா?”

“ ஓ ...... அதுவா? அதுதான் காவியரஸம் என்பது நீர் பேரறிஞர் ஆனதினால் அது உமது கண்ணுக்குத் தெரிகிறது ” எனமன்னனைப் புகழ்ந்தபடி புளுகினான் காளிதாசன்.

“ அதுசரி! சுவடியில் மிகவும் அருவருக்கத்தக்க மணமும் வீசுமோ?”

“ ஏன் வீசாது ? இது இராமராவண யுத்தத்தினைப் பற்றிக் கூறும் சுவடியல்லவா? எத்தனை ஆயிரம் உயிர்கள் போர்க் களத்தில் அழிந்திருக்கின்றன? எவ்வளவு குருதியும் நிணமும்

ஓடியிருக்கின்றன? நீர் அறிஞர் ஆனதினால் இந்தக் காவிய மணமும் உமக்குப் புரிகிறது " மீண்டும் புகழ்ச்சியில் புளுகு!

'கவிஞரே! சுவடிகளுக்கு வால் நீண்டு முளைத்திருக்குமோ?'

ஏன் இருக்காது? வானரங்களைப்பற்றியும் வருணிக்கும் சுவடிகள் அல்லவா? வால்நீண்டுதான் இருக்கும்?

" புலவரே ஏன் மீண்டும் மீண்டும் புளுகுகிறீர் " சுவடிகள் ஆனால் அவற்றினை வெளிப்படக் காட்டலாமே!

அன்றே தடுத்து ஆண்டு கொண்ட அன்னைகாளியினை எண்ணினான்! " உன்னருளால் மகாகவிஞன் ஆகி உலகப் பெருங்காவியங்களைப்படைத்தது உண்மையானால் இப்போதும் என்னைக்கை விடாது காக்கவேண்டும் " என்றபடி மீன்களைச் சுருட்டிவைத்திருந்த துணியினை வீசியெறிந்தான்!

அங்கு! பாலகாண்டம், அயோத்தியா காண்டம் என்று இராமாயணத்தின் பகுதிகள் அனைத்துமாக மாறி மன்னனைப் பார்த்துச் சிரித்தன.

நடுக் கடலுள் சென்றே விழுந்தவனையும் அன்னை காப்பாற்றினாள்.

பட்டரும் மன்னனிடம் தெரிந்தே பௌர்ணமி என்று கூறி யிருப்பினும் அவ்வாறே அருட்செய்து காக்க வேண்டும் என்றவாறு,

தெரிந்து தேடிக்கொண்ட இன்னல்களிலிருந்துகாப்பாற்றப் படுதல் இப்பாடலின் பாராயணப் பலன் ஆகும்.

சகலகலாவல்லிமாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்களன் வெள்ளைஉள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ?சக மேழுமளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகஉண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!

பகவத்கீதை - ஒரு கண்ணோட்டம்

திரு. P, S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி

"ஸர்வோபநிஷதோ காவ: தோக்தா கோபால நந்த ந:
பார்த்தோ வத்ஸ: ஸுதீ: போக்தா துக்தம்கீதாம்ருதம்மஹத்"

"எல்லா உபநிஷத்துக்களும் பசுக்கள், கறப்பவர் இடையர் மகன் (ஸ்ரீ கிருஷ்ணன்); அர்ஜுனன் கன்று; கீதை என்னும் அமிருதம் பால்; அறிவாளிகள் அதைப்பருகுபவராவார்" என்ற வாறு பெருமையாகப் பேசப்படும் ஒரு சிறந்த சமயநூல் பகவத்கீதையாகும்.

இந்நூல் மஹாபாரதத்தில் ஒரு சிறிய பகுதியாகும். பாரதப் போர்க்களத்தில் பகவானுகிய – ஐச்வர்யம், வீர்யம், புகழ், செல்வம், ஞானம், ராகமின்மை என்ற ஆறு குணங்கள் அமைந்த – ஸ்ரீ கிருஷ்ணரால் அர்ஜுனனுக்கு உபதேசிக்கப் பட்ட அரிய நூலாகும். அதன் காரணமாக இது "ஸ்மிருதி" என்று வழங்கப்படுகிறது. உபநிஷத்துக்களில் காணப்படும் கருத்து இந்நூலில் அடங்கியிருப்பதுபற்றி இது உபநிஷத் தாகவும் போற்றப்படுகிறது. கர்ம, பக்தி, ஞானயோகங்களைப் பற்றியும் தத்துவங்களைப் பற்றியும் இதில் எடுத்து உரைக்கப் படுவதால் இது ஒரு சாஸ்திரநூலாகவும் உரைக்கப்படுகிறது. ,'இதிகுஹ்யதமம் சாஸ்த்ரம்'' (இது ஒரு நுட்பமான சாத்திரம்) (அத். 15–சு. 20) என்று ஸ்ரீ கிருஷ்ணரே கூறுவதைக் காணலாம்.

மஹாபாரதத்தில் பீஷ்மபர்வத்தில் 25வது அத்யாயம் முதல் 42வது அத்யாயம் முடிய உள்ள 18 அத்யாயங்களைக் கொண்ட நூலே பகவத்கீதை எனப்படுகிறது. இதில் மொத்த சுலோ கங்கள் எழுநூறாகும்.

இதில் முதல் ஆறு அத்யாயங்கள் ஜீவதத்துவத்தைப் பற்றியும் கர்மயோகத்தைப் பற்றியும் எடுத்துரைக்கின்றன; இரண்டாவது ஆறு அத்யாயங்கள் ஈசுவரஸ்வருபத்தையும் பக்தியோகத்தைப்பற்றியும்விரித்துப்பேசுகின்றன; கடைசி ஆறு அத்யாயங்கள் ஞானயோகத்தைப் பற்றிக் கூறுகின்றன எனப் பொதுவாகக் கூறலாம். "தத் த்வம் அஸி" என்ற மஹாவாக் யத்தில் உள்ள 'த்வம்' (நீ) பதப்பொருளாகிய ஜீவாத் மதத்து வத்தை முதல் ஆறு அத்யாயங்களும் "தத்"(ஈசுவரன்)பதத்தின்

பொருளை இரண்டாவது ஆறு அத்தியாயங்களும், கடைசி ஆறு அத்யாயங்கள் 'அஸி' (ஆகிருய்; இருக்கிருய்) பதக்கருத்தை விளக்குகின்றன.

கீதை வாழ்க்கையின்லட்சியமாகிய முக்திமார்க்கத்தை-சிரேயோ மார்க்கத்தை - இம்மையிலும் மறுமையிலும் பயன்தரும் வழிகளையும் எடுத்துக்காட்டும் நூலாக அமைந்திருக்கிறது என்று யாவரும் ஏற்றுக் கொள்ளுகிருர்கள்.

இந்நூல் போர்க்களத்தில் அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டபோதிலும் மக்கள் சமுதாயத்துக்கு உபதேசிக்கப்பட்டதாகவே அமைந்திருக்கிறது. வாழ்க்கை என்ற போர்க்களத்தில் தினம் அல்லல்படும் மனித சமுதாயத்துக்கு மன அமைதியைக் கொடுப்பதற்கேற்ற நூலாகும்.

த்வைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் இம்மூன்று மதாசாரியர்களும் இதற்குப் பாஷ்யங்கள் இயற்றியிருப்பதால் இது குறிப்பாக ஒரு மதத்தைச் சார்ந்தது எனச் சொல்ல இயலாது·

ஸ்ரீ கிருஷ்ணன் இந்நூலில் ஜாதிப்பிரிவினை பற்றி உள்ள குழப்பத்தைத் தெளிவித்திருக்கிருர். இந்நூலில் ஸ்ரீ கிருஷ்ணன் நான்கு வர்ணங்களை (நான்கு ஜாதிப்பிரிவை) ஏற்றுக்கொண்டிருக்கிருர். ஆயினும் அந்தந்த ஜாதியில் பிறப்புடன் அந்தந்த வர்ணத்துக்குரிய குணங்களும் அமையப்பெறவேண்டும் என்று கூறுகிருர். "சாதுர்வர்ண்யம்மயாஸ்ருஷ்டம்குணகர்மவிபாகச:" (அத். 4 சு. 13) (ஸத்வரஜஸ்தமோ குணங்களுக்கேற்றவாறு அமையும் கர்மங்களைக்கொண்டு நான்கு வர்ணங்கள் என்னல் வகுக்கப்பட்டன) என்பது ஸ்ரீ கண்ணன் வாக்கு. அந்தந்த வர்ணத்தவருக்கு உரிய தர்மங்களையும் 18வது அத்யாயத்தில் 42, 43, 44 வது சுலோகங்களில் ஸ்ரீ கண்ணனே கூறியிருக்கிருர். அத்தர்மங்கள் ஸ்வபாவத்தால அதாவது ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள்காரணமாக அதாவது மனபரிபாகத்தையும்வாழ்க்கை முறையையும் கொண்டு அவரவர்க்கு அந்தந்த குணங்கள் அமைந்துள்ளன என்று கூறியிருக்கிருர். மேலே குறிப்பிட்ட சுலோகங்களில் உள்ள ஸ்வபாவ ப்ரபவை: என்ற சொல்லுக்கு முந்திய ஜன்ம வாசனையால் இந்த ஜன்மத்தில் உண்டான, குணங்கள் என்றபொருளும் கொள்ளலாம் என்று சங்கரபகவத் பாதருடைய பாஷ்யத்தில் காணலாம். ஆக ஏீஎக்குலத்தில் பிறப்பு ஏற்பட்டிருப்பினும் ஜன்மாந்தரவாஸனையால் சமம், தமம், முதலிய தர்மங்கள் அமையப்பெற்றவர் பிராம்மணராவார் என்றும் சௌர்யம் முதலியவைகளைப் பெற்றவர் க்ஷத்ரியராவார்

என்றும், உழவு முதலிய கர்மங்களைச் செய்பவர் வைச்யராவார் என்றும் ஏவல் செய்பவர் சூத்ரர் என்றும் கருதவேண்டும் என்று ஆகிறது ஆகவேதான் பரதர் என்ற க்ஷத்ரியரும் மன அடக்கம் முதலிய உயர்ந்தபண்புகள் காரணமாக ஜடபரதர் என்றபெரிய ஞானியாகக்கருதப்பட்டார். க்ஷத்ரிய தர்மங்களாகிய சௌரியம் முதலிய குணங்கள் வாய்ந்திருந்ததால், துரோணர், பிறப்பில் பிராம்மணராயினும் க்ஷத்ரியராக, கருதப்பட்டார். மேலும் " ஸத்யம் தானம் பொறுமை, ஒழுக்கம், அஹிம்ஸை, : தவம் செய்யத்தகாத காரியத்தில் வெறுப்பு " இவை எவரிடமிருக்கிற தோ அவர் பிராம்மணர் எனக்கருதப்படுவர். இவை எவரிடம் காணப்படவில்லையோ அவர் சூத்ரராவார் ("ஸத்யம் தானம் க்ஷமா சீலம் ஆந்ருசம்ஸ்யம் தபோ கிருணா! த்ருச்யந்தே யத்ர நாகேந்த்ர! ஸ ப்ராம்மண இதிஸ்ம்ருத: யத்ரைதத்நபவேத் ஸர்ப தம்சூத்ரமிதி நிர்திசேத்)" என்று (ஸர்ப்பமாக மாறியிருந்த) நகுஷரிடம் தர்மபுத்ரர் கூறியிருப்பதும் இங்கு கவனிக்கத் தக்கது. இக்கருத்துக்களை பகவத்கீதையின் நீலகண்ட (சதுர்தரீ) உரையில் (அத்தியாயம் 18 சு 41) காணலாம்.

மேலும் கீதை எல்லா இனத்தவருக்கும் ஏன்? எல்லா நாட்டினருக்கும் உரிமையானதாகும். இக்கருத்தை கீதாசார்யராகிய ஸ்ரீகிருஷ்ணனே " எவரெவர் எந்தெந்த வகையில் வழிபடுகின்றனரோ அவரவர்க்கு அந்தந்தவகையில் நான் அருள்புரிகிறேன்; அர்ஜுனா! மனிதர்கள் எவ்வகையிலும் என் வழியையே பின்பற்றுகின்றனர் " என்று.

யே யதா மாம் ப்ரபத்யந்தே தாந் ததைவ பஜாம்யஹம்।
மம வர்த்மாநுவர்த்தந்தே மனுஷ்யா: பார்த்த! ஸர்வச: ॥

என்ற சுலோகத்தில் கூறியிருக்கிறார். (அத். 4 சு. 11)

இந்த சுலோகத்தை எடுத்துக்காட்டி Mr F. T. Brook என்பவர் whom does Bhagavad Geeta belongs to என்ற தனது சொற்பொழிவில் இக்கருத்தைவலியுறுத்திருப்பதைக்காணலாம். இச்சுலோகத்தில் "மாம்" (என்னை) என்பது உலகனைத்துக்கும் பொதுவாகிய எல்லாம்வல்ல பரம்பொருளைக் குறிக்கிறது என்று அவர் கூறுகிறார். அவர் கூறுவதாவது :—

This ME (மாம் – என்னை) is essentially a universal ideal an ideal of universal good, of universal Love, of universal life f, universal truth. It is a scripture of The World.

மேலும் Mr Brook என்பவர்,

மாம் ஹி பார்த்த! வ்யபாச்ரித்ய யேபிஸ்யு: பாபயோநய: I
ஸ்திரியோ வைச்யா: ததா சூத்ரா: தேபியாந்தி பராம் கதிம் II

(அர்ஜுனு! பாபப்பிறப்பினராகிய பெண்கள் வைச்யர் சூத்ரர் ஆகியவரும் என்னைச் சார்ந்திருந்து நிச்சியமாக பரகதியை அடைவார்கள் ") என்ற சுலோகத்தையும் எடுத்துக்காட்டி கீதை யாவருக்கும் பொதுநூல் என்ற கருத்தை வற்புறுத்தியிருக்கிறுர்.

ஆயினும் கீதோபதேசம் பெறுவதற்கு தவமில்லாதவரோ, பக்தி இல்லாதவரோ, (உபதேசத்தை) கேட்க விருப்பம் இல்லாதவரோ என்னை இகழ்பவரோ தகுதியற்றவர். (அத் 18. சு 67.) என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லியிருப்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஆகவே கீதையைக்கற்றுணர, தவம், பக்தி முதலியவை தேவையாகிறது. இக்கருத்தையும் Mr Brook தனது சொற்பொழிவில் கூறியுள்ளார்.

ஆக பகவத்கீதை யாவரும் கற்றுணர்ந்து பயன் பெற வேண்டிய ஒரு உயர்ந்த பொதுவான தத்வநூல் (universal scripture) ஆகும்.

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்

இந்தத் திருக்கோயிலைக் காணப்பெற இன்று எனக்கு வாய்த்தது. திருக்கோயிலின் தூய்மையும் அர்ச்சகர் செய்யும் வழிபாட்டு முறையும் என்னை பெரிதும் கவர்ந்தது. வளர்க சைவம் !

(ஒ-ம்) இரா. ஆவிடைப் பிள்ளை,

துணை ஆணையர்,
உணவுப்பொருள் வழங்கும் துறை
சென்னை.

30—9—82.

அம்பிகை நாமாவளி இசைப்பாடல்

திருமுறைக்கலாநிதி,

வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

இராகம் – செஞ்சுருட்டி] [ஆதிதாளம் – சதுஸ்ரநடை

தையல்நாயகி தையல்நாயகி
தையல்நாயகியே
தண்மலர்ப்பாதம் சரணம் அடைந்தேன்
தாங்கிக்கொள்வாயே (தையல்)

1. உய்வழிகாட்டி அடியனுக்கு உன்
னருள்தரவேணும் அம்மா
உன்னையன்றி ஆரெனக்குறவு
உண்மைதானம்மா (தையல்)

2. வைத்தியநாதன் பக்கம்அமர்ந்தருள்
வாலாம்பிகைத்தாயே
மண்ணில்மயங்கிடு வேனைமலர்க்கரம்
ஏந்திஅணைப்பாயே (தையல்)

3. எண்ணிலாநாமம் கொண்டவளே
எல்லார்க்கும் இன்பம்தருபவளே
ஏதுபிழைசெய்த போதும்பொறுத்திந்த
ஏழைக்கிரங்கி அருள்பவளே (தையல்)

4 வழிபடும்அடியார் கவலைகளைந்திடும்
இளவஞ்சிக்கொடியே
மலரடிதொழும்இந்தச் சிறியனையும்ஆண்
டருள்இமயப்பிடியே (தையல்)

5. எந்நாளும்உனை ஏத்துவார்க்குவரும்
இன்னல்களைபவளே
எங்கிருந்தும்உன் இணையடிநினைவார்க்
கின்பம்தருபவளே (தையல்)

6. கடைக்கண்பார்த்துக் கடையனுக்கருள்செயக்
கல்நெஞ்சேனம்மா
கல்நெஞ்சன்எனைக் காத்திடஉன்மனம்
கரையவேணும்அம்மா (தையல்)

7. பைந்தமிழ்ப்பாடல் கேட்டுளம்இரங்கி
அருள்பாலிப்பவளே
பாசக்கயிற்றெடு எமன்எனைவருத்துமுன்
பார்த்துத்தடுப்பவளே (தையல்)

8. உன்னையன்றி வேறுதுணையிந்த
உலகில்இல்லையம்மா
ஒன்றுக்கும்உதவாச் சிறியேனுக்கும்
உன்னருள்தருவையம்மா (தையல்)

9. காசிவிசாலாக்ஷி யாகிஉள்ளக்
கருத்தைமுடித்தருள்வாள்
காஞ்சிகாமாக்ஷி யாகிஉலகினைக்
காக்கும்அன்னை ஆவாள் (தையல்)

10. நாகைநீலாக்ஷி மதுரைமீனாக்ஷி
எனும்நாமங் கொள்வாள்
நற்றமிழ்ஞானசம் பந்தனுக்கன்று
ஞானப்பால் கொடுத்தாள் (தையல்)

11. தில்லைச்சிவகாமி யாகியிவ்வுலகு
செழிக்கச் செய்திடுவாள்
தேடித்தேடிச் சென்றுபணிவார்தம்
சிந்தைகுளிரச்செய்வாள் (தையல்)

12. பலநாமங்கொண்டு பலதலங்களிலும்
பரமன்பக்கம் உறைவாள்
பணிவார்நெஞ்சினைப் பற்றிக்கொண்டு
பாதுகாக்கவருவாள். (தையல்)

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு 15—9—82 புதன்கிழமை காலை 10 மணியளவில் திருக்கன்ருப்பூர் அருள்மிகு நடுதறிநாதர் திருக்கோயிலிலும் மாலை, திருவலிவலம் அருள்மிகு மனத்துணை நாதர் திருக்கோயிலிலும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அவ்வத்தலங்களில் திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப் பெற்றது. காலை, மாலை ஆகிய இருவேளைகளிலும் திருக்கோயில் வழிபாட்டின்போது தருமையாதீனப்பல்கலைக்கல்லூரி முதல்வர் திருவாசக உரைமணி, திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள் தலத்திருப்பதிகங்களை விளக்கி உரையாற்றினர். ஆதீன அடியவர் ஸ்ரீ நெல்லையப்ப சுவாமிகள் திருக்கன்ருப்பூர் திருக்கோயிலில் 'தலபுராணம்' என்னும் பொருளிலும் வலிவலம் திருக்கோயிலில் 'தலபுராணம்' 'மானக்கஞ்சாறர்' என்னும் பொருளிலும் சொற்பொழிவு ஆற்றினர்கள். அச்சிடப்பெற்ற தலத்திருப்பதிகநூல் வழிபாட்டிற் கலந்து கொண்ட அன்பர் கட்கு வழங்கப்பெற்றது. அன்பர் பலர் வழிபாட்டிற் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கில மாதத் திலும் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று காலை சரியாகப் பத்து மணி அளவில், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழி பாட்டுக் கூட்டம் நிகழ்ந்துவருகின்றது. 3—10—1982 அன்று 17 ஆவது வழிபாட்டுக் கூட்டம் நிகழ்வுற்றது. காலை 10 மணி யளவில் தொடங்கிக் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுற்றது. அடுத்துத் தருமையாதீன வேதசிவாகம பாடசாலை ஆசிரியர் திரு. பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் இறைவனின் கருணைத் திறத்தை உபநிடதக்கதை ஒன்றை மேற்கோள்காட்டி விளக்கம் அளித்தார். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருத்தொண்டர் புராணச்சிந்தனையாகச்

சேக்கிழார் வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துக்கூறித் தடுத்தாட் கொண்ட புராண நிகழ்ச்சியை மனம் கொள்ளும் வண்ணம் விளக்கி யருளினார்கள். 'பித்தன்' என்ற சொல்லுக்கு மிக்க கருணையுள்ளவன் என்று பொருள் என்பதை உலகியலில் "பெத்தமனம் பித்து; பிள்ளைமனம் கல்லு" என்னும் பழமொழி வழக்கை மேற்கோள் காட்டியும் இறைவன் கருணைத்திறத்தினை கதைகள் வாயிலாக விளக்கியும் உபதேசித் தருளினார்கள். மாயூரம் நகரப்பெருமக்களும் சைவ மெய்யன்பர்களும் கலந்து கொண்டு பயனுற்றனர். அடுத்த வழிபாட்டுக் கூட்டம் 7—11—82 அன்று நிகழ இருக்கின்றது. அன்பர்கள் பலரும் கலந்து கொண்டு பயன் பெறுவார்களாக.

ஆதீனத் திருக்கோயில்களில் நிறைபணிவிழா

நிறைபணிவிழா புரட்டாசித்திங்கள் பௌர்ணமி நாளன்று இறைவனுக்குச் சிறந்த முறையில் நிகழ்த்தப் பெறுவது; சந்நிதியில் மலர்ப்பந்தல் அமைத்து, இளநீர், காய், கனி முதலிய வைகளைத் தொங்கவிட்டு அழகுபெறச் செய்தும் இறைவனுக்கு அபிஷேக அலங்காரங்கள் நிறைவுறச் செய்தும் கொண்டாடப் பெறுவது. " இந்நாளில் திருமால் இறைவனைப் பூசித்து அருள் பெற்றார்; திருமாலின் ஆணைப்படி, தேவர்கள் இறைவனைப் பூசித்தனர். எனச் சிவரகஸ்யம் கூறுகின்றது. திருத் தருமை யாதீனம் அருளாட்சியில் விளங்கித் திகழும் சீகாழி, வைத்தீஸ் வரன்கோயில், திருக்கடவூர், திருபுவனம் திருக்கோயில்களிலும் தருமைத் திருக்கோயில்களிலும் இவ்விழா 2—10—82 சனிக் கிழமையன்று மிகச்சிறந்த முறையில் நிகழ்வுற்றது; அன்பர் பலர் இறைவனை வழிபட்டு இன்புற்றனர்.

கும்பகோணத்தில் பாராட்டுவிழா

திருக்கயிலாய யாத்திரை மேற்கொண்டு இனிது நிறைவு செய்து வந்த கயிலைமாமுனிவர் ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகள், காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீனம், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம், பேரூர் சாந்தலிங்க மடாலயம் ஸ்ரீமத் இராமசாமி அடிகளார்ஆகியோர்க்குக் கும்பகோணம் சைவமெய்யன்பர்கள் பக்தர்கள் சார்பில் 12—9—82 அன்று ஆதிகும்பேசுவரர் ஆலயத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் பாராட்டு விழா மிகச்சிறப்பாக நிகழ்வுற்றது. அன்பர்கள் சார்பில்

திரு. டி. எஸ். சுவாமிநாத உடையார் வரவேற்று உரை நிகழ்த்தினார். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. செங்கோட்டு வேலன், திருமதி. சௌந்திரா கைலாசம், கேரளா கிருஷ்ணன் நாயர் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர் குடந்தை மக்கள் சார்பில் திரு. டி. எஸ். அருணசலம் பிள்ளை வரவேற்புரைகளைப் படித்து அளித்தார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தந ஆசியுரையில் யாத்திரை மேற்கொள்வதால் ஏற்படும் நன்மைகளாக உடலும், உள்ளமும் நலம்பல பெறும் என்று விளக்கியருளித்திருக்கயிலாயயாத்திரைசெய்துதிரும்பியதிருப்பனந்தாள் காஞ்சிபுரம், கோவை மடாதிபதிகளுக்குப் பொன்னுடை போர்த்தினார்கள். யாத்திரை செய்து திரும்பிய மடாதிபதிகள் தங்கள் சீரிய அனுபவங்களை எடுத்து விளக்கினார்கள். விழாத் தொடங்கும் முன்னர் திருக்கோயிலை வலமாக வந்து வழிபாடு செய்யப்பெற்றது. அன்பர்கள் பலர் விழாவில் கலந்துகொண்டு பயனுற்றனர்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்

சுசீந்திரம் (கிளை)

சுசீந்திரம், தருமையாதீனத் திருமடத்தில் 13—6—1982 திங்கட்கிழமை யன்று ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றச் சார்பில் மாலை 6 மணியளவில் ஸ்ரீ செருத்துணை நாயனார் குருபூஜையும், திருவிளக்கு வழிபாடும் நடைபெற்றது. வித்துவான். திரு. சி. குமரேசப் பிள்ளை ஸ்ரீ செருத்துணை நாயனார் குறித்துச் சொற்பொழிவாற்றினார். தவச்செல்வி. ஓம்பிரகாஷ் அம்மையார் திருவிளக்குப்பூசையை முன்னின்று நிகழ்த்தினார். திருவிளக்குப் பூசையிலும் சொற்பொழிவின் போதும் பக்தர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

திருப்பெண்ணாகடத்தில்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்

கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கட்கு

வரவேற்புப் பாராட்டுவிழா

அன்பர்களோடுதிருக்கயிலாயயாத்திரையைமேற்கொண்டு கயிலைநாதனைத் தரிசித்து எழுந்தருளிய திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களைத் திருப்பெண்ணாகடம்

சைவ மெய்யன்பர்கள் 20—9—82 திங்கட்கிழமை சிறப்பான முறையில் வரவேற்றுப் பாராட்டுவிழா நிகழ்த்தி நல்லாசி பெற்றனர்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் 20—9—82 காலை ஸ்ரீ மெய்கண்டார் ஆலயத்துக்கு எழுந்தருளி வழிபட்டார்கள். மாலையில் நகர்வலமாக ஸ்ரீ சுடர்க்கொழுந்தீசர் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினர்கள். மாலை 7-30 மணி அளவில் முத்துக்குமரப் பூங்காவில் வரவேற்புப் பாராட்டுவிழா நடைபெற்றது.

ஆலயச்சார்பில் திரு. ரெங்காசாரி, திரு. கோதண்டராமன் ஆகியோர் வரவேற்றனர். விழாக்குழுவின் சார்பில் திரு. கொ. மு. தங்கவேலு பிள்ளை, திரு. ந. ஞானப்பிரகாசம் பிள்ளை, திரு. ச. முத்துக்குமாரசாமிப்பிள்ளை, புலவர், திரு. இரா. சிவப்பிரகாசம் பிள்ளை, திரு. ஆர். குஞ்சிதபாதம் பிள்ளை, திரு. ஆர். சீனுவாசம் பிள்ளை, திரு. சிவ. பழமலை ஆகியோர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களை வரவேற்றும் மாலைகளணிவித்தும் பொன்னுடை போர்த்தியும் சிறப்பித்தனர்.

புலவர் திரு. எழிலன் பி. ஏ., திரு. க. வடிவேலுப் பிள்ளை எம். ஏ., எல். டி. திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. திரு. சண்முக நயினர் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் திருக்கயிலையின் பெருமைகளையும் யாத்திரை அனுபவங்களையும் எடுத்துக்கூறி அனைவர்க்கும் நல்லாசி அரு... னர்கள்.

சகலகலாவல்லிமாலை

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பண்கண்ட ளவிற் பணியச்செய்
வாய்; படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடிஉண்
டேனும் விளம்பில்உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலாவல்லியே!

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துந்துபிஞு ஐப்பசிமீ 1உ முதல் 30உ முடிய)

(18—10—1982 முதல் 16—11—1982 முடிய)

		ல/	ரா
	இராசி		
கே	செ	சூ சந் கு	சனி சு பு

செ			ல/ பு
	அம்ஸம்		கே
ராகு கு			சு
சந்		சூ	சனி

ஸ்ரீ துந்துபிஞு புரட்டாசிமீ 31உ பானுவாரம் சுவாதி நக்ஷத்திரம் பவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயாதி 37 நாழிகை 38 விஞடிக்கு ரிஷப லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் லோகசுபிட்சார்த்தத்தை முன்னிட்டு கன்னியா ராசியிலிருந்து துலாராசி சங்கிரமணமாக ஐப்பசிமாதப் பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று துலா விஷு புண்ணியகாலமாகும். மறுதினம் சோமவாரம் ஐப்பசிமாதம் முதல்தேதியாகின்றது. விரயாதிபதி சூரியபகவான் ஆகின்ருர். சங்கிரமணகாலகிரகஸ்திதியின் பலனுவது லோகத்தில் சுபிட்சம் நிலவும். லோகில் எங்கும் பூமிவளம் வனவளம் மிகுந்து தேசங்களில் செல்வம் தழைக்கும். அரசபரிபாலனத்தில் பிரஜைகள் இரட்சிக்கப்படுவர். தேசங்களில் எங்கும் ஆன்ருேர்களால் சிவபுண்ணிய கைங்கர்யங்கள் பொதுநல தர்மங்கள் நடைபெற்றுக்கொண்

டிருக்கும். பிரஜைகள் பலதுறைதொழில்களிலும் வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெற்று திரிகரண சுத்தியில் பூரண உழைப்பு மேற்கொண்டு நலம் பல அடைவர்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரியபீடங்களில் லோகம் நிலைபெற்றுநிற்க ஆதாரமாக திருஉரு தோற்றப் பொலிவில் அவதாரமாகிவந்து சிவராஜயோகத்தில் திருவீற்றிருக்கின்ற சிவஞான குருமகான்கள் லோகத்தில் சிவதர்மங்கள் நீடிக்கவும் லோகமாந்தர்கள் சைவ சமய நன்னெறியில் உயரவும் திருவாய் மலர்ந்து உபதேசம் செய்தருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்திய 6 கால பூசைகள் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பிரஜைகள் சிவாலயம் சென்று ஈசுவரனை வழிபட்டு உயர்ந்து விளங்குவர்.

சனிப்பெயர்ச்சி

குறிப்பு:- துந்துபிஹு ஐப்பசிமீ 11உ (28—10—82) குருவாரம் சூரிய உதயாதி 52 நாழிகை 54 விஞடிக்கு இரவு மணி 3. நிமிஷம் 10 க்கு கடக லக்கினத்தில் சூரிய புத்திரனுகிய சனிபகவான் வானமண்டலத்தில் 180 பாகைகளைக் கடந்து கன்னியாராசியினின்று தனது உச்சஸ்தானமாகிய துலாராசியில் பிரவேசிக்கின்ருர். அவர் அந்த ராசியில் முப்பது மாதங்கள் ($2\frac{1}{2}$ ஆண்டுகள்) சஞ்சரிப்பார். அதனுல் லோகத்திற்கு நன்மைகள் ஏற்படும். பிரஜைகளுக்கு கருத்த வஸ்துக்கள் இரும்பு, நிலக்கரி, இயந்திரங்கள் இவற்றில் தொழில் அபிவிருத்தி அடைந்து ஆக்கம் ஏற்படும். கீழ்க்கண்டராசிகளில் கூறுகிறபடி லோகபிரஜைகளுக்கு அனுபோகங்களை ஏற்படுத்தும்.

ரிஷபம், சிம்மம், தனுசு இவ்விராசியை உடையோருக்கு எல்லா காரியங்களிலும் வெற்றிதரும். நிதி நிலைமையில் அபிவிருத்தியாகும். பதவி, அந்தஸ்து, கௌரவம் முதலியவை உயர்ந்து விளங்கும். இவை எதிர்பாராமல் தாமே ஏற்படும் பலன்களாம்.

மேஷம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம் இவ்விராசியையுடையோருக்கு நரம்புத் தளர்ச்சி, வாயுபிடித நலிவுவந்து நீங்குதல், அதிகபிரயாசை மேற்கொள்ளுதல் சீரானபலன் வருதல், காரியங்களில் தாமத நிலைமை, விடுவாகனங்களில் செலவு மிகுதல் ஆகும். இதில் குருபலன் உள்ள காலங்களில் நற்பலன்களேநடக்கும், கோட்சாரத்தில் மாதக் கோள்கள் நற்பலஸ்தானங்களில் சஞ்சரிக்கும் காலம் சுபிட்சம் தரும்.

பொதுவில் சனிபகவான் உச்சஸ்தானத்தில்விளங்குவதால் மேற்குறிப்பிட்ட ராசியுடையோருக்கு ஆரம்பத்தில் நற்பல மின்மை தோற்றினும் முடிவில் ஆரோக்கியம், ஸ்திரசம்பத்து. வனம் தோப்புத்துறவுகளில் நீடித்த நற்பலன்களை உண்டுபண் ணுதல் ஆகும்.

சாந்தி :– எல்லாராசியை யுடையோரும் தேவாலயம் சென்று சனிபகவான் சன்னதியில் சனி சகஸ்ரநாம அருச்சனை செய்துக்கொள்வதுநலம். சனிவாரத்தில் எள்ளுடன் நல்லெண் ணெய் விளக்கு சனிபகவானிடம் ஏற்றிவைத்தும் நவக்கிரக பிரதட்சனம்செய்தும்வருதலால் அல்லல்தீரும். நிம்மதியளிக்கும், வாழ்க்கையில் எல்லா நன்மைகளும் ஏற்படும்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – $\frac{1}{4}$
(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் தனவருமானம் தான்யவருமானம் வந்துசேரும். வித்துவத்துவம் கலைதுறைகளில் இராஜாங்க மரியாதையை ஏற்படுத்தும். அக்டோபர் 22 தேதி ஆனால் வாகனத்தில் புதுமை ஏற்படும். புத்திரனுக்கு உயர்ந்த ஸ்திதியளிக்கும். தாம்பத்ய வாழ்க்கையில் சுமுகம் நிலவும். அக்டோபர் 18, 19, 25, 26, 27, 28, நவம்பர் 1, 2, 5, 6, 11, 12, 13, 14, 15 தேதிகளில் தனதாயம், உறுதிப்பான்மை, வைபோக நிகழ்ச்சி ஆகிய நற்பலன்களை ஏற்படுத்தும். அக்டோபர் 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ – உரோகிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$
(இ. ஊ. ஏ. – ஒ. வ. வி. வூ. – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் வந்துசேரும். வித்தியாவியா பாராதி கலைதுறைகளில் விசேஷநற்பலன்களையளிக்கும். சகோ தரர் புத்திரர் இவர்களால் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் ஏற்படச் செய்யும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் இருந்துவரும். அக்டோபர் 18, 19, 20, 21, 27, 28. 29, 30, 31, நவம்பர் 3, 4, 7, 8, 14, 15, 16 தேதிகளில் தனதாயம், காரியசித்தி, வைபோகம் ஆகிய நற்பலன்கள் ஏற்படும், அக்டோபர் 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ – திருவாதிரை – புனர்பூசம் $\frac{3}{4}$
(கா. கி. - கு. க. ஸ. ச்சா. – கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம்வந்துகொண்டிருக்கும். வித்யா

வியாபாராதி கலைதுறைகளில் பிரயாசை ஒருபுறம் இருப்பினும் நல்லன ஏற்பட்டுவரும். ஞாயிற்றுக்கிழமைசூரியார்ச்சனைசெய்ய நலம் தரும். பூமியில் இயந்திரங்களில் நல்ல பிரயோஜனம் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். அக்டோபர் 20, 21, 22, 23, 29, 30, 31, நவம்பர் 1, 2, 5, 6, 9. 10, 16 இத்தேதிகள் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். 24, 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்,

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

(ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுபம் தரும். குடும்பாபிவிருத்தியில் தனுதிசௌகரியங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். பூஷணங்களின் பிராப்தியையளிக்கும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் புகழ்தரும். அரசாங்க நன்மதிப்புதரும். லிகிதங்கள் மூலம் நல்ல சேதிகள் வந்துக்கொண்டிருக்கும். அக்டோபர் 22, 23, 24, 25, 26 நவம்பர் 1, 2, 3, 4, 7, 8, 11, 12, 13 தேதிகளில் தனுதாயம் தரும். சிறந்தோர் நட்பு ஏற்படும். அக்டோபர் 27, 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனவரவு கணிசமாகவரும். ஆபரண பிராப்தியை தரும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம்தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். அக்டோபர் 18, 19, 25, 26, 27, 28 நவம்பர் 3, 4, 5, 6, 9, 10, 14, 15 தேதிகளில் தனுதாயம் தரும். மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் ஆகும். ஆக்டோபர் 30, 31 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் நான்கு விதங்களில் தனவருமானம் வரும். சகோதரர் சுகம் நன்ருக இருந்துவரும். வீடுவாகனங்களில் நவீனம் ஏற்படும். புத்திர பிராப்தியையளிக்கும். தாம்பத்திய வாழ்க்கையில் மிகுந்த மகிழ்ச்சி ஏற்படும். அக்டோபர் 20, 21, 27, 28, 29, 30, 31 நவம்பர் 5, 6, 7, 8, 11, 12, 13, 16 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். நவம்பர் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾
(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் கெடியாக பணவருமானம் வரும். அதற்கேற்ற படி அடிக்கடி செலவும் ஏற்படும். பூமியில் இயந்திரங்களில் நல்லன ஏற்பட்டு வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் உத்தியோகத்தில் நட்பு சூழ்தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். அக்டோபர் 18, 19, 22, 23, 24, 29, 30, 31 நவம்பர் 1, 2, 7, 8, 9, 10, 14, 15 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். நவம்பர் 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.
(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் வரும். அடிக்கடி சுபச் செலவும் ஆகும். சகோதரர் ஸ்திரிவழியினரில் விசேஷம் நடக்கும். பூமியில் இயந்திர சாதனங்களில் பணம் முடங்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். அக்டோபர் 20, 21, 25, 26 நவம்பர் 1, 2, 3, 4, 9, 10, 11, 12, 13, 16 இத் தேதிகளில் தனுதாயம் தரும். வைராக்கிய சிந்தை ஏற்படும். காரிய ஜெயம் ஆகும். நவம்பர் 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼
(யே, யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல பணவருமானம் வரும். சகோதரருக்கு உயர்வு ஏற்படும். வீடுவாகனங்களில் நவீனம் ஏற்படும். வித்தியா வியாபாராதிகளில் இலாப பிராப்தியாக இருந்துவரும். புத்திரபாக்கியம் ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். அக்டோபர் 18, 19, 22, 23, 27, 28 நவம்பர் 3, 4, 5, 6, 11, 12, 13, 14, 15தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். நவம்பர் 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ – திருவோணம் - அவிட்டம் ½
(போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் கணிசமாக வரும். சகோதரர் புத்திரர்களினால் மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் ஏற்படும். வித்துவம் கலைத்துறைகளில் உத்தியோகத்தில் சிறப்புதரும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். எல்லாவற்றிலும் நன்மைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். அக்டோபர் 18, 19, 20, 21, 25, 26, 27, 30, 31 நவம்பர் 5, 6, 7, 8, 14, 15, 16 இத்தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். நவம்பர் 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾
(கு. கே, – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் தானிய வருமானம் நல்ல விதத்தில் வந்துசேரும். சகோதரருக்கு சுபம் ஏற்படும். வித்தியா வியாபாரதி கலைத்துறைகளில் முன்னேற்ற ஸ்திதியாகும். இதுவரையில் நடக்காதிருந்த எல்லாகாரியங்களும் எளிதாக நடக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். அக்டோபர் 20, 21, 22, 23, 27, 28 நவம்பர் 1, 2, 7, 8, 9, 10, 16 இத்தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். நவம்பர் 11, 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.
(தி. – து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல தன வருமானம் வரும். பரோபகார நற்பணிகளில் ஈடுபாடு ஏற்படும். சகோதரர் இஷ்டமித்திரர்களின் அன்பு மகிழ்ச்சிதரும். அக்டோபர் 26வ அளவில் வித்துவத் துவம் கலைத்துறைகளில் அரியவாய்ப்புகளை ஏற்படுத்தும். பிரபல ஸ்திதியாகும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். அக்டோபர் 22, 23, 24, 25 26, 29, 31 நவம்பர் 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

ஐப்பசி மாதச் சிறப்பு நாட்கள்

18—10—82 திங்கள், துலாவிஷு புண்ணியகாலம், மயிலாடுதுறை - வள்ளலார்கோயில் ஆகிய திருத்தலங்களில் துலாவிஷு தீர்த்தம், திருக்கடவூர் காலசம்காரமூர்த்தி அபிஷேகம், சீகாழி உமாமகேசருக்கு உச்சிக்காலத்தில் புழுகாப்பு தருமை மகாலட்சுமி துர்க்காதேவி சந்நிதியில் சதசண்டி யக்ஞாரம்பம், மயிலாடுதுறை தலைக்காவேரி முதலிய இடங்களில் துலாஸ்நான ஆரம்பம்.

22—10—82 வெள்ளி, தருமை ஸ்ரீ துர்க்காம்பிகை சந்நிதியில் மாலை வில்வவிருக்ஷ அபிமந்திரணம். ஐயடிகள் கடவர்கோன் நாயனார் குருபூஜை.

24—10—82 ஞாயிறு. காலை சண்டியக்ஞ யாகசாலையில் நவபத்திரிகா கிரஹணம்.

25—10—82 திங்கள், தருமை ஸ்ரீ துர்க்காம்பிகை சண்டியக்ஞ பூஜை. யாகசாலையில் அஷ்டாதச ஆயுத மண்டலபூஜை

26—10—82 செவ்வாய், மகாநவமி, சரஸ்வதிபூஜை ஆயுதபூஜை. தருமையாதீன ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம்பிகை சந்நிதியில் நடைபெறும் சதசண்டியக்ஞ மகாபூர்ணாகுதி. சோபனத் திரவிய சமர்ப்பணம், இரவு மண்டலபூஜை. வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருவையாறு ஆகிய தலங்களில் அம்பாளுக்கு லக்ஷார்ச்சனை பூர்த்தி.

27—10—82 புதன். விஜயதசமி, தருமை ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம் பிகைக்குச்சதசண்டியக்ஞகலசாபிஷேகம்,விசேஷபூஜை

28—10—82 வியாழன், சனிப்பெயர்ச்சி இரவு மணி 3-10.

30—10—82 சனி, சனிமகாப்பிரதோஷம்.

31—10—82 ஞாயிறு, திருமூலநாயனார் குருபூஜை.

1—11—82 திங்கள், பௌர்ணமிவிரத பூஜை, அன்னாபிஷேகம். தருமை 7 ஆவது குருமகாசந்நிதாமை் ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிக சுவாமிகள், தருமை 9 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் குருபூஜைகள். நெடுமாறநாயனார் குருபூஜை.

2—11—82 செவ்வாய், தருமை ஸ்ரீசண்முகர் கிருத்திகை அபிஷேகம், கிருத்திகை விரதம். இடங்கழிநாயனார் குருபூஜை.

3—11—82 புதன், வேளூர்க் கிருத்திகை.

4—11—82 வியாழன், சங்கடஹரசதுர்த்தி. தருமை 22 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள் குருபூஜை

7—11—82 ஞாயிறு, மயிலாடுதுறை,வள்ளலார்கோயில்முதலியதலங் களில் துலா உற்சவ ஆரம்பம். சத்திநாயனார் குருபூஜை.

8—11—82 திங்கள், தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமா சாரியசுவாமிகள் குருபூஜை. காளாஷ்டமி, ஆயில்யவிழா.

10—11—82 புதன், திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் 26-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசண்முகதேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடம் அமர்ந்தநாள். தருமை 10 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் குருபூஜை.

(தொடர்ச்சி 510 d பார்க்க)

Printed & Published by V. Ramaiah Pillai, Managar, Dharmapuram at the Gnanasambandam Press Dharmapuram, Mayiladuthurai 10-10-82